விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 29 புதன்கிழமை (15.10.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 300



ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ


## ஈழக் கோரிக்கைப் பேச்சு த.தே.கூட்டமைப்பு கேள்வி

(கொழும்பு)

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமைக்கும், ஈழக் கோரிக்கைக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வடமாகாணத்துக்கான மூன்று நாள் பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கிளிநொச்சியில் கடந்த 12-ம் திகதி இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புலம் பெயர்ந்த சில அமைப்புக்களும் தமிழீழக் கோரிக்கையை கைவிட்டால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை மாற்றுவதற்குத் தான் தயார் எனக் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்தக் கூற்றுத் தொடர்பில் சுரேஸ் பிரேமச்சந்திரனிடம் ஊடகங்கள் வினவிய போது, தமிழ் மக்கள், சர்வதேச சமூகம் மற்றும் சிங்கள மக்களையும் தொடர்ந்து ஏமாற்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவின் கூற்று அர்த்தமற்றது எனக் குறிப்பிட்ட அவர், 20 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மகிந்த கொழும்பு திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

வடக்குக்கு மூன்று நாள் பயணமாக வருகை தந்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீவகத்துக்கான நேற்றைய பயணத்துடன், வடக்கு பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பினார்.

நெடுந்தீவுக்கு உலங்குவானூர்தி மூலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுக்காலை சென்றார். முதன் முதலாக ஜனாதிபதி ஒருவர் நேற்றையதினமே 02 ஆம் பக்கம் பார்க்க....

## 'நோ பயர் ஸோன்' விருதிற்காக பரிந்துரை

(லண்டன்)

பிரித்தானியாவின் சனல் 4 ஊடகத்தினால் வெளியிடப்பட்ட நோ பயர ஸோன் (போர்க்குற்ற காணொளி) என்னும் ஆவணப்படம் அமெரிக்க விருது ஒன்றிற்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் முக்கிய தொலைக்காட்சி விருதுகளில் ஒன்றிற்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

2014-ம் ஆண்டுக்கான சர்வதேச எம்மி விருது 20 ஆம் பக்கம் பார்க்க....

# மகிந்த போட்டியிட்டால் நான் தோற்கடிப்பேன்

## அத்துரலியே ரத்ன தேரர் சூளுரை



(கொழும்பு)

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்கப் போவதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான அத்துரலியே ரத்ன தேரர் சூளுரைத்துள்ளார்.**

அத்துரலிய ரத்ன தேரரின் தூய்மையான நாளை அமைப்பின் மூலம் தயாரிக்கப்பட்ட உத்தேச அரசியல்யாப்பு தொடர்பான வரைபை அறிமுகப்படுத்தும் முக்கிய கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கடும் ஆவேசத்துடன் 20 ஆம் பக்கம் பார்க்க....



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வேலணை பிரதேசசபைக் கட்டடம் திறந்து வைக்கப்படுவதையும், வட்டுக்கோட்டைக்கு சென்றிருந்த ஜனாதிபதியுடன் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவர் வித்தியாசாகரம் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள் சந்தித்து உரையாடுவதை படத்தில் காணலாம்.

## 13 ஐ தாண்டி ஐ.தே.க. ஒருபோதும் செல்லாது

### உறுதியளிக்கிறார் ரணில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்காலத்தில் ஆட்சி அமைத்தால் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் 13-வது திருத்தச் சட்டமூலத்துக்கு அப்பால் ஒருபோதும் செல்லாது என அக்கட்சியின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனசெத பெரமுனவின் தலைவர் வண.பத்தரமுல்ல சீல ரத்ன தேரரை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்திருந்தார்.

இதன்பின்னர் அங்கு இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே 20 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை மீன்களுக்கு ஐரோப்பாவில் தடை!

(கொழும்பு)

உலகெங்கும் சட்டவிரோதமான வகையில் மீன்பிடித் தொழிலை எதிர்த்து போராடும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இலங்கையிலிருந்து மீன்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கும் ஒரு பிரேரணையை ஐரோப்பிய ஒன்றியம் நேற்று முன்னெடுத்துள்ளது.

சட்டவிரோதமான வகையில் இடம்பெறும் மீன்பிடி நடவடிக்கைகளை இலங்கை நிறுத்த வேண்டு மென்று நான்கு ஆண்டுகளாக தீவிரமான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போதிலும், அதை தடுத்து நிறுத்த இலங்கை காத்திரமான முன்னெடுப்புகளைச் செய்ய 20 ஆம் பக்கம் பார்க்க....


O/L
மாதிரி வினாத்தாள்
க.பொ.த (சாதாரண) தர மாணவர்களுக்கு...
கொழும்பு கல்வி வலயத்தால் தயாரிக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்
உள்ளே


அம்மான்னா சும்மா இல்லேடா
அவ இல்லேன்னா யாருமில்லேடா!



(11 ஆம் பக்கம் பார்க்க...)


முதன் முறையாக யாழ் மண்ணில் 100வீத விசா உறுதிப்பாட்டுடன் வெறும் 900 000/= ரூபா செலுத்தி செங்கன் விசா

2 மாதத்தில் இத்தாலி, பிரான்ஸ், நோர்வே, சுவிஸ், ஜேர்மனி உட்பட 26 நர்டுகளில் படிக்க உழைக்க 2 வருட விசா மேலதிக கட்டணங்கள் எதுவுமில்லை. எழுத்துமூலமான விசா உறுதிப்பாடு.

(நிபந்தனைகளுடன்)

திசைகாட்டி பிறைவேற் லிமிடெட்
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
அரசபதிவுக்கு உட்பட்டது பதிவிலக்கம் : PV82703
இல.175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே இல : 021 221 9016
(C-8749)




## பயணிகள் விமானத்தில் தொழில்நுட்பக் கோளாறு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து சென்னைக்கு நேற்றுக் காலை 9 மணிக்கு 122 பயணிகளுடன் புறப்பட்டுச் சென்ற எயார் லங்கா விமானம் சென்னையில் தரை இறக்கப்பட்ட போது விமானத்தில் திடீரென தொழில் நுட்பக் கோளாறு ஏற்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து விரைவாக செயற்பட்ட விமானிகள், விமானத்தை பாதுகாப்பாக தரையிறக்கினர்.

சரியான நேரத்தில் தொழில் நுட்பக் கோளாறை விமானி 02 ஆம் பக்கம் பார்க்க....

## வேட்பாளர் குறித்து இன்னும் முடிவில்லை

### - ஐ.தே.க

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் குறித்து ஐக்கிய தேசிய கட்சி இறுதி முடிவுகள் எதனையும் எடுக்கவில்லை என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார் என பல ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வரும் நிலையிலேயே ரவியின் இந்த கருத்து வெளியாகியுள்ளது. 19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மகிந்த...

தலில் போட்டியிட வேண்டும்.

அதற்காக 19வது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து மீண்டும் சுயாதீன ஆணைக்குழுக்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அவ்வாறு அவர் அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றாமல் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டால் அவரைத் தோற்கடிப்பதற்கு தயங்க மாட்டோம்.

அவருக்கு எதிராக வீதியில் இறங்கி போராடவும் தயாராக இருக்கின்றோம். இதற்காக அரசாங்கத்தை விட்டு வெளியேறவும் நாங்கள் தயார் என்றும் ஆவேசமாக அவர் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

இந்தக் கூட்டத்தில் மாதுளுவாவே சோபித தேரர், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் பசில் ராஜபக்ஷ, முன்னாள் சட்டமா அதிபர் சரத் என் சில்வா, உள்பட ஆளும், எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் ஏராளமானோர் கலந்து கொண்டிருந்தனர். (செ-11)


## அமைதியின் சொற்கள்
Words of Peace

புரிந்து கொள்ளுங்கள். உயிரைக் கண்டு கொள்வதில் ஆனந்தம் அடையுங்கள். இந்த மூச்சைக் கண்டுகொள்வதில் ஆனந்தம் அடையுங்கள். உங்கள் உள்ளே வசிக்கும் தெய்வத்தைக் கண்டுகொள்வதில் ஆனந்தம் அடையுங்கள்.
பிரேம் ராவத்

மேலதிக தகவல்களுக்கு:
011 7250001
3 pm - 10 pm
(8065)


## யாழ்தேவிக்கான முன்பதிவுகள் செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்ப இணைப்பிலுள்ள பிரச்சினையால் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான ரயில் முன்பதிவு நடவடிக்கைகள், செயலிழந்துள்ளதாக யாழ். புகையிரத நிலைய அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

யாழிலிருந்து கொழும் பிற்கு நேற்று செவ்வாய்க் கிழமை மாலை, முதலாவது புகையிரத சேவை ஆரம்பிக்கப் படவிருந்தது.

இந்நிலையில் அந்த ரயிலில் பயணத்தை மேற்கொளவதற்காக பயணிகள முன்பதிவு செய்ய யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்கு சென்றவேளை முற்பதிவு நடவடிக்கைகள் இன்னமும் செயற்படத் தொடங்கவில்லையென அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் அங்கு நின்றிருந்த புகையிரத நிலைய அலுவலரிடம் கேட்டபோது, தமது முறைமைகளை செயற்படுவதற்கான தொழில்நுட்ப இணைப்புக்கள் இணைக்கப்படாததால் முன்பதிவு பணிகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக தெரிவித்தார். (செ-11)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி


### இரவிச்சந்திரன் பானுஜா

இன்று 15.10.2014 கொழும்பு ப்ண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் எமது கல்லூரி ஆசிரியை செல்வி இரவிச்சந்திரன் ப்ானுஜா அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
கிளி/முருகானந்தா கல்லூரி, முரசுமோட்டை.

(சி-8750)

## மரண அறிவித்தல்



### கந்தையா நயினார்

(முன்னாள் அம்பாள்பஸ்உரிமையாளரும், அம்பாள் பழைய பாட்ஸ் கடை உரிமையாளரும்)

இல 5, 5ம் ஒழுங்கை, அரசடி வீதி நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நயினார் 14.10.2014 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா -- பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அமிர்தவாசகம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி, சில்வேஸ்திரி ஆகியோரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி, சாமியார், திருநாவுக்கரசு, இராசம்மா, கண்மணிப்பிள்ளை சண்முகராசா மற்றும் சதாசிவம், பிள்ளையம்மா, மங்கையற்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ரணிஸ்குமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - வேலணை), டிலிஸ்குமார், அகிலா, அனுலா (கனடா), அலெஸ்ரெலா, அனிலா (உதவி கணக்காளர் - BCAS Jaffna), நிரேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், லேக்குமார் (சுதன்), சசிகலா (ஆசிரியர்-யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க. பாடசாலை), விஜயகாந் (கனடா), ஜெசீலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கவி, சங்கீத், நிகிதா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இராசமணி மற்றும் மகாலட்சுமி, காலஞ்சென்றவர்களான, மகேஸ்வரி, அருள்ராசா, நடராசா மற்றும் ஜெயராணி, முத்தம்மா, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், செல்வரட்ணம், தேவராசா மற்றும் யேசுராசா, துரைராசா, செல்வராசா, யோகராசா, யோகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.10.2014 வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(8067)

# ஜனாதி...

நெடுந்தீவுக்கு சென்றுள்ளார்.

அங்கு நெடுந்தீவு பிரதேச செலயகத்தை திறந்து வைத்த பின்னர், நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடத்தையும் அவர் திறந்து வைத்தார்.

நெடுந்தீவு பயணத்தை முடித்துக் கொண்டு மதியம் 12.30 மணியளவில், வேலணைக்கு வருகை தந்த ஜனாதிபதி, அங்கு வேலணை பிரதேச செயலகத்தை திறந்து வைத்தார். அதன்பின்னர் வேலணை மத்திய மின்பாவனையாளர் மையத்தையும் அவர் திறந்து வைத்தார்.

தொடர்ந்து ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்குச் சென்ற ஜனாதிபதி அங்கு மகிந்தோதய ஆய்வுகூடத்தை திறந்து வைத்தார்.

மதிய உணவின் பின்னர் காரைநகருக்குச் சென்ற ஜனாதிபதி மகிந்த அங்கு காரைநகர் தியாகரசா மத்திய மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை திறந்து வைத்தார்.

இறுதியாக வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்குச் சென்று அங்கும் மகிந்தோதய ஆய்வுகூடத்தை திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து வடக்குக்கான தனது மூன்று நாள் பயணத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நேற்று மாலை கொழும்பு திரும்பினார். (செ-4)

# பயணி...

கள் கண்டு பிடித்து இறக்கியதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. இதனால் 122 பயணிகளும் உயிர் தப்பினர்.

அந்த விமானம் மீண்டும் நேற்று நண்பகல் 12 மணிக்கு கொழும்பு புறப்பட்டு செல்ல வேண்டும்.

எனினும் இயந்திர கோளாறு காரணமாக விமானத்தை தொடர்ந்து இயக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து சென்னையில் இருந்து கொழும்பு செல்லும் அந்த விமானம் ரத்து செய்யப்பட்டது.

இதனால் அந்த விமானத்தில் பயணம் செய்வதற்காக காத்திருந்த 130 பயணிகள் பெரும் சிரமத்திற்கு ஆளான நிலையில், அங்குள்ள ஓய்வறையில் அவர்கள் தங்க வைக்கப்பட்டனர். (செ-11)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி இளம்செல்வி பானுதாசன்

06.10.2014 அன்று தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெற்ற நல் ஆசிரியர்களுக்கான ஜனாதிபதி விருதான பிரதீபா பிரபா விருதினை பெற்ற எமது பாடசாலை பிரதி அதிபரான திருமதி இளம்செல்வி பானுதாசன் அவர்களை வாழ்க என்றும், வளமுடன் வளர்க உங்கள் சேவை என பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
மாணவர்கள், பெற்றோர்கள்.
கிளி/விவேகானந்த வித்தியாலயம்,
அம்பாள்குளம் கிளிநொச்சி.

(சி-8752)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. செல்வரத்தினம் பாஸ்கரன்

இன்று 15.10.2014 புதன்கிழமை கொழும்பு ப்ண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (B.M.I.C.H) கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம் பெறும் திரு.செல்வரத்தினம் பாஸ்கரன் (Diploma in Teaching Food Teachnology Credit Pass) அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறந்து விளங்கிட வாழத்துகின்றோம்.

சண்டிலிப்பாய் வடக்கு

வாழ்த்துவோர் :
குடும்பத்தினர்

(8063)

## ஓராண்டு நினைவஞ்சலி



முருகுப்பிள்ளை நிர்மலன் (சமூக ஆர்வலர்)

(1 ஆம் வட்டாரம் முள்ளியவளை - முல்லைத்தீவு)

அன்புச் சகோதரனாய் எம்முடன் உறவாடிய
நிர்மலன் அண்ணாவே
ஓராண்டென்ன இவ் உலகு உள்ளவரை - உன்
நினைவு எம்முடன் தொடரும்.

உரிமையாளர் ;
திரு.திருமதி சிவகுமார் - சுதா

விது மெடிக்கல் சென்டர்,
அண்ணா பேக்கவுஸ்
சந்தி அம்மன் கோயிலடி,
முள்ளியவளை.

(8066)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் விளம்பர தொடர்பு
021 221 7603,021 567 1532
valampurii@yahoo.com
valampuriijaffna@gmail.com

# அடக்குமுறை அரசியலை நிராகரிக்க வேண்டும்

அடக்குமுறை அரசியலை மக்கள் நிராகரிக்க வேண்டுமென ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். காலி மாவட்ட அமைப்பாளர்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய பொன்சேகா இந்த கருத்தினை தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. ஆனால் ஆட்சியாளர்கள் தற்போதே வன்முறைகளை ஆரம்பித்துள்ளனர்.

அச்சுறுத்தல்கள்,அடக்குமுறைகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தற்போதே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதிலும் இவ்வாறான சம்பவங்கள் வியாபிக்கத் தொடங்கியுள்ளன. இந்த விடயம் குறித்து மக்கள் தெளிவுடன் இருக்க வேண்டும்.

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் அடக்குமுறை அரசியல்வாதிகளை மக்கள் நிராகரிக்க வேண்டும்.

அவர்களுக்கு எந்தவித ஒத்துழைப்புக்களையும் மக்கள் வழங்கக் கூடாது என சரத் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யோ.டர்சிகன் கிளி/சிவநகர் தமிழ் கலவன் பாடசாலை மாணவன் யோகச்சந்திரன் டர்சிகன் 2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளை பெற்று சாதனை படைத்ததையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் சித்தியடைய வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கிறோம்.

வாழ்த்துவோர்:
அப்பா,அம்மா,அப்பம்மா,தம்பி,தங்கை, உறவினர்கள்.
143/1, சிவநகர், உருத்திரபுரம் (சி-8750)

## சேவை நலன் பாராட்டு



SLTS 2-I (Primary Trd)

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியையான திருமதி.அமிர்தாம்பிகை செல்வரத்தினம் அவர்கள் 15.10.2014 இன்றிலிருந்து தமது சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். அவரின் பத்தாண்டுகளுக்கு மேலான அர்ப்பணிப்பான சேவையை நன்றியோடு நினைவு கூர்வதுடன், அவர்தம் ஓய்வுக் காலமானது சிறப்புற அமைய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/இருபாலை சீ.சீ.த.க பாடசாலை (8039)



RAVEENS E.M.C. KARAVEDDY

Yr-6 Admision 2015 (English Medium)
(Scholors Only)
Forms for Admission Test are available
Closing date: 25.10.2014 (Saturday)
Director: P.Easwaranathan, B.Sc (Agr) Hons
(8055) T.Phone: 021 226 3321

## கண்ணீர் அஞ்சலி


திரு செல்வராசா கதிர்காமலிங்கம்

எமது பாடசாலையில் கல்விசாரா ஊழியராகக் கடமையாற்றும் திரு.செல்வராசா கதிர்காமலிங்கம் அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயருறுவதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
(சி-8753) யா/ யாழ்.இந்து மகளிர் கல்லூரி

## 8 ஆம் நாள் நினைவுநாள்

### அரியகுட்டி மகேந்திரம் (பெரியதம்பி)



பிறப்பு 01.01.1938 — இறப்பு 06.10.2014

சுதுமலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி மகேந்திரம் அவர்கள் 06.10.2014 அன்று காலமானார். அன்னார் அற்புதராணியின் அன்புக் கணவரும் நடராசா (யாழ்ப்பாணம்), குணசிங்கம் (சுவிஸ்), துரையம்மா (சுதுமலை), இரத்தினம் (பிரான்ஸ்), இராசாத்தி (அளவெட்டி) ஆகியோரின் சகோதரனும் உதயகுமார் (சுதுமலை), சூரியகுமார், விஜயகுமார், சதீஸ்குமார், நதீஸ்குமார், கிருபாஜினி (சுவிஸ்), உதயராணி (மதி- மன்னார்), ஜெயராணி (மாலா- புத்தளம்) ஆகியோரின் அன்பு தந்தையும் கோபாலகிருஷ்ணன் (மன்னார்), நவர்தீன் (புத்தளம்), மாலா, கிருஜா, பத்மதேவி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் விவேகா, நிதுஷா, வெல்வா, மெலினா, வினோத், கெவின் (சுவிஸ்), சஞ்சன், சுவின், மதுஷா, விதுஜா (மன்னார்), றிங்கா, றிமாஷா (புத்தளம்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

06.10.2014 திங்கட்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு எல்லா வகையிலும் அனுதாபம் தெரிவித்து இறுதி வரை இணைந்து நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் 14.10.2014 நேற்று செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று 8 ஆம் நாள் நிகழ்விலும் கலந்து கொண்டவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாவடி தெற்கு, மானிப்பாய். (8054) குடும்பத்தினர்.

## இராசி பலன்

15.10.2014
(புரட்டாதி 29, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை- 5.58 மணிக்கு
சப்தமி பிற்பகல் -2.41 மணிவரை
திருவாதிரை முற்பகல் -11.50 மணிவரை
இராகுகாலம் -12.02-1.32 மணிவரை
சுபநேரம் -4.32-6.02 மணிவரை

வளவன்

**மேடம்:** உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும், செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள்.

**இடபம்:** வாய்ப்புக்கள் தேடி வரலாம், உறவினர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள், மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்:** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்கள் சிலவற்றில் மாற்றம் செய்ய நேரிடலாம், காணாமற்போன பொருளொன்று மீண்டும் கிடைக்கலாம்.

**கடகம்:** எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்:** பொருட்சேர்க்கைக்கு அத்திபாரமிடுவீர்கள், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், உறவினர் வருகையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கன்னி:** செல்வாக்கு மேலோங்கும் நாள், பக்குவமாகப்பேசி காரியம் சாதிப்பீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு.

**துலாம்:** தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், ஆன்றோர் சந்திப்புண்டு, ஒருசில கட்டுப்பாடுகள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** குடும்பத்தில் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், முயற்சிகளில் சில தாமதங்கள் உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு.


**தனுசு:** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும், அரசு வழியில் அனுகூலமுண்டு, வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும்.


**மகரம்:** உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.



**கும்பம்:** சுபசெய்திகள் வந்து சேரும் நாள், வளர்ச்சிப்பாதையை நோக்கி நகர்வீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், தொலைதூரச் செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்புண்டு, தாய்வழி உறவில் நன்மையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வடக்குக்கு மூன்று நாள் பயணமாக வந்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று செவ்வாய்க்கிழமை தீவகத்துக்கு சென்று பல்வேறு திட்டங்களை ஆரம்பித்து வைத்தார். நெடுந்தீவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரதேச செயலகக் கட்டடம், நெடுந்தீவு மத்தியமகாவித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மகிந்தோதைய தொழிநுட்ப ஆய்வு கூடம், வேலணையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரதேச செயலகக்கட்டடம், மின்சார சபையின் பாவனையாளர் அலுவலகம் ஆகியவற்றை ஜனாதிபதி திறந்துவைத்தார். நயினாதீவுக்குச் சென்ற ஜனாதிபதி அங்கு நாகவிகாராதிபதியையும் சந்தித்தார். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, காரைநகர் தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம் மற்றும் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி ஆகியவற்றில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மகிந்தோதய ஆய்வுகூடங்களையும் அவர் திறந்து வைத்துள்ளார்.

படங்கள் : உ.சாளின்

# மேலுமொரு நகரை கைப்பற்றியது ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு

சிரியா- ஈராக்கில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் பெரும்பாலான நகரங்களை பிடித்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். தற்போது அன்பர் மாகாணத்தில் முற்றுகையிட்டு நகரங்களை கைப்பற்றி வருகின்றனர். சமீபத்தில் இயூபிரேட்ஸ் ஆற்றின் கரையில் உள்ள ஹீத் என்ற நகரத்தை தீவிரவாதிகள் கைப்பற்றினர்.

தீவிரவாதிகளுக்கு ஈராக் இராணுவம் பதிலடி கொடுக்கும் வகையில் அங்குள்ள ஆசாத் முகாமில் தங்கியிருந்து தாக்குதல் நடத்தியது. ஆனால் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இராணுவத்தால் ஈடு கொடுக்க முடியவில்லை.

இதற்கிடையே ஹீத் நகரின் மைய பகுதியை தீவிரவாதிகள் ஆக்கிரமித்தனர். எனவே ஹீத் நகரை தீவிரவாதிகளுக்கு ஈராக் இராணுவம் விட்டுக் கொடுத்து தாரைவார்த்தது. ஆசாத் முகாமில் இருந்து வெளியேறி வேறு இடத்துக்கு சென்று விட்டது. ஆசாத் முகாம் வடமேற்கு ஹீத் பகுதியில் உள்ள மிகப் பெரிய முகாம் ஆகும்.


இதன் ஒரு பகுதி இன்னும் அரசின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. இது பாலைவனத்தால் சூழப்பட்டது. எனவே அது ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு சவாலாக இருந்தது. இருந்தும் அதை தீவிரவாதிகள் முறியடித்துள்ளனர்.

இதற்கிடையே வடக்கு ஈராக்கில் உள்ள யாஷிடி மைனாரிட்டி இனத்தைச் சேர்ந்த பெண்கள் மற்றும் குழந்தைகளை ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடித்து சிறை வைத்துள்ளனர்.

அன்பர் மாகாணத்தில் ஈராக் அரசு மற்றும் அமெரிக்கா தலைமையிலான இராணுவ கூட்டணி நடத்திய வான்வழி தாக்குதல் காரணமாக 30 ஆயிரம் குடும்பங்கள் அல்லது ஒரு இலட்சத்து 80 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என ஐ.நாவின் மனித உரிமைகள் குழு தெரிவித்துள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிரசார பத்திரிகையான தபிக்கில் சிறைபிடிக்கப்பட்டு உள்ள யாஷிடி மைனாரிட்டி இனத்தைச் சேர்ந்த பெண்கள் மற்றும் குழந்தைகள் அடிமைகளாக விற்பனை செய்யப்படுவார்கள் என கூறப்பட்டுள்ளது. (இ)

# மீட்பு பணிக்குதவ பாம்பு வடிவிலான ரோபோ கண்டுபிடிக்கப்பட்டுள்ளது



(கொழும்பு)

உலகம் முழுவதும் இதுவரையில் பல வடிவிலான 'ரோபோ'க்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. தற்போது பாம்பு போன்று வளைந்து நெளிந்து செல்லும் 'ரோபோ'வை அமெரிக்காவின் கார்னகில் மெலான் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த 'ரோபோ' மணல் மேடுகள் மற்றும் செல்ல முடியாத மலை முகடுகளில் ஏறும் திறன் படைத்தவை. இது ஆபத்தில் இருப்பவரை கண்டுபிடித்து மீட்க மிகவும் உதவிகரமாக இருக்கும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

# அமைச்சருக்கு அழைப்பாணை



கடந்த ஊவா மாகாண சபை தேர்தலில் மேல்மாகாண சபை உறுப்பினரை தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் விசாரணை நடத்த பதுளை நீதிமன்றம் 'அமைச்சர் லக்ஷ்மன் செனவிரட்னவிற்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது. எதிர்வரும் 29 ஆம் திகதி பதுளை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பதுளை நீதிமன்ற நீதவான் மனோஜா பிரியதர்சினி டி.சில்வா உத்தரவிட்டுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தியாக வெளியிட்டுள்ளது. (இ)

# பார்வைகள் நாடகம்

யாழ். அல்லைப்பிட்டி யாகப்பர் ஆலய வளாகத்தில் பார்வைகள் எனும் சமூக விழிப்புணர்வு நாடகம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்விற்கு கியூடெக் கரித்தாஸ் இணைப்பாளர் செ.ஜோசப் பாலா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

யாழ். திருமறைக்கலாமன்ற நாடக நெறியாளர் ஜோ. ஜெஸ்ரின் எழுதி நெறியாள்கை செய்துள்ள மேற்படி நாடகம் யாழ். அல்லைப்பிட்டி வாழ். இளையோர்களின் நடிப்பில் தற்கால இளையோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி விழிப்பூட்டும் நாடகமாக உருவாக்கப்பட்டுள்ளது. (இ-51)

# குடும்ப அரசியலை விரட்ட ஒன்றிணைய வேண்டுமாம்

## அழைக்கிறது பலசேனா

(கொழும்பு)

நாட்டுக்குள் நிலவும் குடும்ப அரசியலை இல்லாதொழிப்பதற்கும் இலங்கையை ஆட்சி செய்யும் கறுப்பு, வெள்ளையர்களை விரட்டியடிக்கவும் இந்து-சிங்கள இனத்தவர்கள் ஒன்றிணைய வேண்டும் என்று பொது பலசேனா அமைப்பின் தலைவர் கிரம விமலஜோதி தேரர் தெரிவித்தார்.

அதேபோன்று, இந்த நாட்டின் மீதும் இனத்தின் மீதும் பற்றுள்ள இந்து - சிங்கள இளைஞர், யுவதிகளை அரசியலில் அறிமுகப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிருலப்பனையில் அமைந்துள்ள பொதுபல சேனா காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்திய யாத்திரை

மிகவும் குறைந்த கட்டணத்தில் சகல வசதிகளுடன் சேவை நலன் கொண்டு நடைபெறும் திருத்தல யாத்திரைகள்

நாட்கள் 12, யாத்திரிகர்கள் 10, ஆரம்பம் 10.11.2014. நேமம் அம்மாபகவான், உச்சிப் பிள்ளையார், ஆறுபடை வீடுகள், திருச்சி 9 நவக்கிரக ஆலயங்கள், பஞ்சபூதத் தலங்கள், திருப்பதி,மதுரை, தஞ்சாவூர், இராமேஸ்வரம், கும்பகோணம், பிரம்மாகோவில், பஞ்சவடி, ஆஞ்சநேயர் உட்பட 45 இற்கும் அதிக ஆலயங்களை தரிசிப்பதுடன் பாண்டிச்சேரி பீச், மரீனா பீச்சும் காணலாம்.

இரு வழி விமான ரிக்கெட், விமான நிலையம் போக, வர வாகன வசதி, மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, 4 மணி காப்பி, ரீ, மினரல் வோட்டர் (குடிநீர்) தரமான குளியல் அறை இணைந்த 2 பேருக்கு ஒரு அறை, யாத்திரை முடியும் வரை AC வாகன வசதி. இத்துடன் சகல ஆலய தரிசன நுழைவு கட்டணங்கள் அனைத்து வசதிகளும் உட்பட எமது தனிப்பட்ட சேவையாக யாத்திரை முடிந்து விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் செல்ல வாகன வசதியும் ஆலயங்களில் குறுப்பாக எடுக்கும் 45 புகைப்படங்களும் தரப்படும். விபரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.

**மேல் விபரங்கட்கு**
**கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன், TP:0777680102**

முக்கிய கவனிப்பு (சி-8745)

மும்பை சிரடிபாபா பக்தர்களுக்காக 7 நாள் சிரடிபாபா, சனிசிங்ககுப்பூர் பஞ்சவடி, திரியம்பகேஸ்வரர் ஜோதிலிங்கங்களுள் ஒன்று மிகக் குறைந்த கட்டணம் அனைத்து செலவுகளும் உட்பட முன்பதிவு செய்யவும் 10 பேர் சேர்ந்ததும் யாத்திரை ஆரம்பமாகும்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## கிளி/செல்வாநகர் அ.த.க.பாடசாலை செல்வாநகர்- கிளிநொச்சியில்

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்களுக்கு வழிகாட்டி ஊக்கமளித்த ஆசிரியர்கள், அவர்களது பெற்றோர்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம்.


செல்வி கே.கலையரசி
புள்ளி:- 165
மாவட்ட நிலை- 79


செல்வி அ.திருத்தமிழ்
புள்ளி:- 161
மாவட்ட நிலை- 127


செல்வி ர.பிபிசா
புள்ளி:- 158
மாவட்ட நிலை- 152

**100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்**

சி.சுவேதா-151, கெ.விதுசனன்- 141, ர.வினோதினி-138, கே.கலையரசி- 127, இ. தமிழ்குமரன்- 126, சி.வசிகரன்- 126, ஆ.சயந்தினி- 124, க.கயல்விழி- 118, செ.நிலாவினி- 115, கு.சுடரினி- 114, சு.கீரன்- 108, உ.கயலரசன்- 107, ச.அரிஸ்- 107, ச.கௌசிகா- 104, நா.தனுசியா- 104, சி.இசையமுதன்-100

**வாழ்த்துவோர்:- திரு.திருமதி, கேதீசன், புனிதா குடும்பத்தினர், செல்வாநகர்.**

(8746)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ஹாட்லிக் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் ஒரு படிக்கல்லாக விளங்கிய இளைப்பாறிய தாவரவியல் ஆசிரியரும் Raveens E.M.C. Karaveddy என்ற ஆங்கில மொழி கல்வி நிறுவன இயக்குநருமான ***உயர் திரு. ப.ஈஸ்வரநாதன்*** அவர்கள் அண்மையில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி உயர் திரு. ஜெ. கஜநிதிபாலன் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் எடுத்து பதவி ஏற்றதையிட்டு அவரை மனமகிழ்ந்து பாராட்டுகிறோம்.



(8055)

**யா/ ஹாட்லிக் கல்லூரியின் நண்பர்கள், வடமராட்சி.**

**வலம்புரியின் விளம்பர தொடர்பு**
**021 221 7603, 021 567 1532**
valampurii@yahoo.com
valampuriijaffna@gmail.com

# Bright Inn Special Promotion

## "பிறைற் இன்" இன் தீபாவளி சிறப்பு சலுகை

**இன்று 15.10.2014 முதல் பிறைற் இன் தீபாவளி சிறப்பு சலுகையைப் பெற்றிட நீங்களும் விரையுங்கள்!**





**சனி , ஞாயிறு மற்றும் திங்கட் கிழமைகளில் மதிய நேரத்தில் கோழி புரியாணி மற்றும் பிறைற் றைஸ்பார்சல் ஒன்று வாங்கினால் இன்னொன்று இலவசம்!**

## Buy one Get one Free!!

**Only on Saturday, Sunday & Monday.**
**12.00-3.00 வரை....**

250/- கோழி புரியாணி



200/- பிறைற் றைஸ்

**Tel:- 021 222 1889, 021 4922334**
**Bright Inn. No.51, Sivan Road Thirunelveli, Jaffna.**
**Hot Line:- 077 7983933 Email:-**
**brightinnjaffna@yahoo.com**

(சி-8740)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## NOTICE

Reference to the advertisement for vacancies appeared in this paper on 25/09/2014. Please note the correction in the qualification for the post of Supervisor (Landscape) Grade III required under Supervisor (Landscape) Grade III (Vavuniya Campus) as follows;

**SUPERVISOR (LANDSCAPE) GRADE III (Vavuniya Campus)**

**Qualifications:**

i)G.C.E (Ordinary Level) Examination in six subjects at not more than two sittings.

**AND**

ii)Successful completion of one year's practical training course in Agriculture conducted by the Department of Agriculture or equivalent.

Further, closing date for applications is extended for all the following posts indicated in the advertisement referred above up to 31/10/2014.

- ASSISTANT REGISTRAR (LEGAL & DOCUMENTATION) (University of Jaffna)
- WORKSHOP ENGINEER GRADE III (University of Jaffna - Kilinochchi Premises)
- UNIVERSITY MEDICAL OFFICER (University of Jaffna/ Vavuniya Campus/ University of Jaffna – Kilinochchi Premises)
- CURATOR (LANDSCAPE) GRADE III (University of Jaffna)
- MARSHAL GRADE II (University of Jaffna)
- SUPERVISOR (LANDSCAPE) GRADE III (Vavuniya Campus)
- PUBLIC HEALTH INSPECTOR GRADE III (University of Jaffna)
- PUBLIC HEALTH NURSE (University of Jaffna)
- NURSING OFFICER GRADE II (University of Jaffna/ Vavuniya Campus)
- RECORD KEEPER GRADE II (University of Jaffna)
- BOOK BINDER GRADE II (University of Jaffna)
- MASON GRADE II (University of Jaffna)
- MECHANIC GRADE II (University of Jaffna/ University of Jaffna – Kilinochchi Premises)

**Regret any inconvenience caused.**

(C-8747)

**REGISTRAR**
**13/10/2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்கள் திட்டமிட்ட முறைக்கு அமைவாக நடத்தப்பட வேண்டும்

## பவ்ரல் வேண்டுகோள்

(கொழும்பு)

எதிர்காலத்தில் நடத்தப்படும் தேர்தல்கள் ஒரு திட்டமிட்ட முறைமைக்கு அமைய நடத்தப்பட வேண்டும் எனவும் அதற்காக கொள்கை மற்றும் சட்டம் வகுக்கப்பட வேண்டும் எனவும் பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அடுத்த சில தின்ங்களில் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தேர்தல் திணைக்கள அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக பவ்ரல் அமைப்



பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 25 தேர்தல்களை ஆராய்ந்து பார்க்கும் போது வருடத்திற்கு இரண்டு தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இவ்விதமாக அவ்வப்போது தேர்தல் நடத்தப்படுவது மக்களின் ஜனநாயகத்திற்கு மாத்திரமல்லாது பணமும் விரயமாகும். இதனால், எதிர்காலத்தில் நடத்தப்படும் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பன ஒரே நாளில் நடத்த முடியும்.

இது சம்பந்தமாக உரிய தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (இ)

# பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஜீன் டிரோலுக்கு பொருளாதாரத்துறைக்கான நோபல் பரிசு

(பரீஸ்)

'டைனமைட்' வெடிமருந்தை கண்டுபிடித்த ஆல்பிரட் நோபல் என்பவரின் பெயரில் இந்த பரிசு வழங்கப்படுகிறது.

நோபல் பரிசு கமிட்டி ஒவ்வொரு ஆண்டும், மருத்துவம், வேதியியல், இயற்பியல், பொருளாதாரம், இலக்கியம், உலக அமைதி ஆகிய துறைகளில் சிறப்பாக பணியாற்றியவர்களை தேர்ந்து எடுத்து நோபல் பரிசு வழங்கி கௌரவித்து வருகிறது.

இந்த ஆண்டில் வேதியியல், இயற்பியல், பொருளாதாரம் அமைதிக்கான நோபல் பரிசு போன்ற துறைகளுக்கான நோபல் பரிசுகள்



ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன.

பொருளாதார துறைக்கான நோபல் பரிசு பிரான்சின் ஜீன் டிரோலுக்கு வழங்கப்படுகிறது. பொருளாதாரத் துறைக்கான நோபல் பரிசை ஸ்வீடன் ஸ்டர்க்ஹோமில் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

பொருளாதரத்தில் சந்தை முறைப்படுத்துதல் மற்றும் சந்தை வலிமை பற்றி ஆராய்ச்சி மேற்கொண்டு சாதனை செய்ததற்காக ஜீன் டிரோலுக்கு இந்த ஆண்டிற்கு பொருளாதாரத்துறைக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்துறைக்கான நோபல் பரிசு கடந்த 1969ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 1998இல் இந்தியாவை சேர்ந்த அமர்த்தியா சென் பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# சீனாவில் நடந்த வன்முறையில் 100 பேர் பலி; 12 தீவிரவாதிகளுக்கு மரண தண்டனை விதிப்பு

சீன நாட்டில் உள்ள மேற்கத்தேய பகுதியான ஜின் ஜியாங் மாகாணத்தில் கடந்த 2 வருடங்களாக இரு பிரிவினருக்கு இடையே வன்முறை சம்பவங்கள் நடந்து வருகின்றன. இந்த வன்முறை சம்பவங்களில் 100 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். ஜூலை மாதம் 28ஆம் திகதி 2 இடங்களில் கத்தி மற்றும் வாள் ஏந்திய தீவிரவாதிகள் தாக்குதலில் பொதுமக்கள் 37 பேர் கொல்லப்பட்டனர். இதில் 59 தீவிரவாதிகளை பாதுகாப்பு படையினர் துப்பாக்கி முனையில் மடக்கி பிடித்தனர். அவர்கள் மீது காஷ்கர் நகர நீதிமன்றில் நடந்த விசாரணையில் 12 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

15 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு அது நிறுத்தி வைக்கப்படுவதாகவும், 9 பேருக்கு ஆயுள் தண்டனையும் 20 பேருக்கு 4 முதல் 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பு கூறப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 100 | 60 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 80 | 120 |
| தக்காளி | 100 | 80 | 70 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 | 50 |
| கோவா | 120 | 80 | 80 | 80 |
| கரட் | 120 | 60 | 100 | 120 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 |
| புடோல் | 60 | 60 | 70 | 80 |
| வாழைக்காய் | 90 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 50 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 70 | 100 | 80 |
| பாகற்காய் | 160 | 160 | 150 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 60 |
| பயற்றங்காய் | 60 | 100 | 80 | 120 |
| லீக்ஸ் | 160 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 60 | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 140 | 80 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 120 | 150 | 150 | 120 |
| போஞ்சி | 220 | 140 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 60 | 100 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 60-90 | 120 | 150 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 15-40 | 30 | 30 | 30-40 |
| இராசவள்ளி | 120 | 80 | 100 | 120 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 165

ராகுலன் பாலா




டொறின் மன்மதநாயகம்




எக்ஸ் டெனிஸ்




கஜன் வினோ




சுயேன் மகேந்திரன்



துஷா கரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014
# மாதிரி வினாத்தாள்- மேல்மாகாணம்


**கணிதம்** **இரண்டு மணித்தியாலங்கள்**

## பகுதி A
**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக**

1. ஐந்து தேங்காய்களின் விலை ரூ 240 ஆயின், ஒரு தேங்காயின் விலை யாது?

2. $\frac{1}{x} = 5$ ஆயின், X இன் பெறுமதியாது?

3. X இன் பருமனைக் காண்க.




4. அப்பிள் பழம் ஒன்றை ரூ 100 இற்கு வாங்கி ரூ 80 இற்கு விற்பதனால் அடையும் நட்ட சதவீதம் யாது?


5. அரிசி மூடை ஒன்றின் நிறை 3.2t ஆயின், அதனை kg இல் தருக.

6. தரப்பட்டுள்ள தண்டு இலை வரைபிலுள்ள தரவுகளின் வீச்சு யாது?

| தண்டு | இலை |
|---|---|
| 0 | 7,8 |
| 1 | 0,5,5,9 |
| 2 | 1,2,7,8 |

7. 1 தொடக்கம் 10 வரை இலக்கமிடப்பட்ட அட்டைகளிலிருந்து சதுர எண் கொண்ட அட்டையைப் பெறுவதற்கான நிகழ்தகவு யாது?


8. உருவின் சுற்றளவுக்கான அட்சரகணிதக் கோவையை சுருக்கி எழுதுக.




9. சுருக்குக. $\frac{2}{x+1} - \frac{1}{x+1}$


10. சுருக்கி எழுதுக. 1.01 X 1.1

11. தரப்பட்ட எண்கோட்டில் காட்டப்பட்ட சமனிலித் தீர்வுத் தொடையை எழுதுக.




12. மோட்டார் வாகனம் ஒன்றின் விற்பனையின் போது 3 % தரகாக அறவிடப்பட்ட பணம் ரூ 75000 ஆயின், அதன் விற்பனை விலை யாது?

13. X இன் பருமனைக் காண்க.




14. பின்வரும் அட்சரகணித உறுப்புகளின் பொ.ம.சியைக் காண்க.

$2xy,\ 4x^2y,\ 8ax$


15. எட்டு சோடிகள் செருப்பு தயாரிப்பதற்கு இரு மனிதர்களுக்கு 4 நாட்கள் எடுத்தது. இவ் இரு மனிதர்களும் 12 சோடிகள் செருப்பு தயாரிப்பதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும்.

16. காரணி காண்க. $4 - x^2 + 2 - x$

17. 1: 20000 என்னும் அளவிடையில் ஒரு படம் வரையப்பட்டது.
I. 3 cm அளவிடை நீளத்தால் காட்டப்படும் தூரத்தை மீற்றரில் தருக.
II. 3 km தூரத்தைக் காட்டுவதற்குப் பயன்படும் அளவிடை நீளம் யாது?

18. (0,1) என்னும் ஆள்கூறுகளைத் திருப்தி செய்வதும் $y = 2x - 3$ என்னும் நேர்கோட்டிற்குச் சமாந்தரமானதுமான நேர் கோட்டின் சமன்பாட்டை எழுதுக.


19. படத்தில் காட்டப்பட்ட அரை வட்டத்தில் 12cm, 5cm நீளமான இரு நாண்கள் வரையப்பட்டுள்ளன. இவ் வட்டத்தின் ஆரையின் நீளம் யாது?




20. வட்ட வரைபு ஒன்றில் 30° ஆரைச்சிறைக் கோணமானது 75 மாணவர்களைக் குறிக்கின்றது. அக் குழுவிலுள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

21. இரு வட்டங்களின் ஆரைகளின் விகிதம் 3 : 4 ஆகும். அவற்றின் பரப்பளவுகளின் விகிதத்தைக் காண்க.

22. உருவில் காட்டிய தரவுகளின் படி $D\hat{A}C$ யின் பருமனை m,n சார்பில் எழுதுக.




23. $(a-b)^3 = 2\sqrt{2}$ ஆயின், (a - b) இன் பெறுமதி யாது?

24. சுருக்கி எழுதுக. $72.3 \times 10^{-1} + 0.0377 \times 10^2$

25. 20 பிள்ளைகள் வைத்திருக்கும் மொத்தப் பணத்தின் இடை ரூ 11 ஆகும். அவர்களில் நிமலனிடம் உள்ள பணம் ரூ 49 ஆயின், ஏனைய பிள்ளைகளிடம் உள்ள பணத் தொகையின் மொத்தப் பெறுமதி எவ்வளவு?


26. ஒழுங்கான பல்கோணி ஒன்றின் புறக்கோணம் ஒன்றின் பருமன் 70° என சந்திரா கூறினாள். இதனை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? காரணம் தருக.

27. $y = x^2 - 4$ என்னும் சார்பானது X அச்சுடன் இடைவெட்டும் புள்ளியின் ஆள்கூறுகள் யாவை?

28. தரப்பட்ட உருவிலுள்ள முக்கோணியின் பக்கங்களுக்கிடையேயான விகிதங்களைக் கருத்திற் கொண்டு

$\frac{AC}{BC}$ இற்குச் சமனான விகிதம் ஒன்று எழுதுக.

$\frac{AC}{BC} = \frac{\square}{\square}$





29. $ay = x^t$ ஆயின், t ஐ எழுவாயாக மாற்றுக.

30. $(x+a)(x+b) = x^2 + cx + 15$ ஆகும். a,b,c இற்குப் பொருத்தமான இரு தொகுதிப் பெறுமானங்களை அட்டவணையில் நிரப்புக.


| | a | b | c |
|---|---|---|---|
| i | | | |
| ii | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1900 முதல் 1920 வரை, ஒலிம்பிக் போட்டிகளில் கயிற்றை இழுக்கும் (Tug of war) விளையாட்டும் இருந்தது.



சுட்டி



# அட அப்படியா?

உலகின் முதல் கலங்கரை விளக்கம், எகிப்தில் உள்ள அலெக்ஸாண்ட்ரியா கலங்கரை விளக்கம்தான். இது கி.மு மூன்றாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.




❖1815 - பிரான்சின் நெப்போலியன் பொனபார்ட் அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள புனித ஹெலெனா தீவுக்கு நாடு கடத்தப்பட்டான்.

❖1863 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: முதற் தடவையாக நீர்மூழ்கிக் கப்பல் (ஹன்லி) ஒன்று கப்பல் ஒன்றை மூழ்கடித்தது.

❖1878 - தோமஸ் எடிசன் தனது மின்குமிழ் தயாரிக்கும் கம்பனியை ஆரம்பித்தார்.

❖1915 - முதலாம் உலகப் போர்: ஆஸ்திரியா-ஹங்கேரி சேர்பியாவை முற்றுகையிட்டது.

❖1932 - டாட்டா விமான நிறுவனம் (பின்னர் இது ஏர் இந்தியா எனப் பெயரிடப்பட்டது) தனது முதலாவது வானூர்தி சேவையை ஆரம்பித்தது.

❖1951 - மெக்சிக்கோவின் லூயி மிரமோண்டெஸ் முதற் தடவையாக கருத்தடை மாத்திரையை அறிமுகப்படுத்தினார்.

❖1966 - ஆப்பிரிக்க அமெரிக்கர்களின் உரிமைகளை வென்றெடுக்கவென கருஞ்சிறுத்தைக் கட்சி என்ற பெயரில் மார்க்சிய இயக்கம் ஐக்கிய அமெரிக்காவில் ஓக்லண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

❖1970 - அன்வர் சதாத் எகிப்தின் அதிபரானார்.

1990 - பனிப்போரைத் தணிக்க உதவியமைக்காக சோவியத் தலைவர் மிக்கைல் கொர்பச்சோவ் நோபல் பரிசு பெற்றார்.

❖1997 - நாசாவின் ஹியூஜென்ஸ் விண்ணுளவி சனி கோளை நோக்கி ஏவப்பட்டது.

❖2001 - நாசாவின் கலிலியோ விண்கலம் ஜுப்பிட்டரின் சந்திரனுக்குக் கிட்டவாக 112 மைல் தூரம் சென்றது.

❖2003 - மக்கள் சீனக் குடியரசு முதற்தடவையாக சென்ஷோ 5 விண்கலத்தில் விண்வெளி வீரர்களை அனுப்பியது.

பிறப்புகள்

❖1844 - பிரீட்ரிக் நீட்சே, ஜேர்மனிய மெய்யியலாளர் (இ. 1900)

❖1897 - முடிகொண்டான் வெங்கடராம ஐயர், கர்நாடக இசைக் கலைஞர் (இ.1975)

❖1926 - மிஷேல் ஃபூக்கோ, சிந்தனையாளர் (இ. 1984)

❖1931 - அப்துல் கலாம், இந்தியக் குடியரசுத் தலைவர்

❖1931 - வீரமணி ஐயர், ஈழத்துக் கவிஞர் (இ. 2003)

இறப்புகள்

❖1918 - சிரடி சாயி பாபா

❖2009 - தருமபுரம் ப. சுவாமிநாதன், திருமுறை ஓதுவார் (பி. 1923)

❖2009 - தெ. நித்தியகீர்த்தி, ஈழத்து, ஆஸ்திரேலிய எழுத்தாளர் (பி. 1946)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



59 முறை ஆஸ்கர் விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டு, 22 விருதுகளைப் பெற்ற ஒரே நபர், வால்ட் டிஸ்னி.

(தொடரும்)

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்




...நாளை நடக்க இருக்கும் கென்ய நாட்டுடனான போட்டி எங்களுக்கு மிக மிக முக்கியமானது. இதில் வெற்றி பெற்றால் மட்டுமே ந்ாங்கள் தொடர்ந்து உலக் கோப்பை போட்டிகளில் பங்கேற்க முடியும். எனவேதான், என்னுடைய தனிப்பட்ட சோகத்தைக் கூட ஒதுக்கிவிட்டு நாட்டிற்காக வந்துள்ளேன். இந்திய நாடு என்மேல் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறது. அந்த நம்பிக்கையை நான் காப்பாற்ற வேண்டும் என்று தெளிந்த நீரோடை போல் சச்சின் பேசியதுதான் அன்றைய செய்தித்

> சதம் அடித்தவுடன் வானத்தைப் பார்த்தேன். மேலுலகில் இருந்து கொண்டு அப்பா என்னை வாழ்த்துவதுபோல உணர்ந்தேன். நான் உணர்ந்தவற்றை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.

தாள்கள் மற்றும் தொலைக்காட்சிகளின் ஹைலைட்.

உலகக் கோப்பை போட்டிகள் ஆரம்பித்து பத்து நாட்கள் ஆகிவிட்டன. ஆனால், ஒருவரும் செஞ்சுரி அடிக்கவில்லை. கென்யாவுடனான போட்டியில்தான் ஒருவர் முதல் செஞ்சுரியைப் பதிவு செய்தார். அவர் ஒரு சில நாட்களுக்கு முன்புதான் தன்னுடைய தந்தையின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு விட்டு வந்திருந்தார். அந்த அவர் வேறு யார்? சச்சின்தான். 94 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா கென்யாவை வீழ்த்தியது. சச்சின் பொறுமையாக விளையாடி 140 ரன்கள் குவித்தார். அவருக்கு இது இருபத்தி இரண்டாவது செஞ்சுரி.



ஆட்ட நாயகனாக சச்சின் தேர்வு செய்யப்பட்டார். அந்த நிகழ்ச்சியில் சச்சின் கூறயதாவது, சதம் அடித்தவுடன் வானத்தைப் பார்த்தேன். மேலுலகில் இருந்துகொண்டு அப்பா என்னை வாழ்த்துவது போல் உணர்ந்தேன். நான் உணர்ந்தவற்றை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அம்மா கொடுத்த ஊக்கத்தால்தான் இன்றைக்கு நான் உங்கள் முன்னே நின்றுகொண்டிருக்கிறேன். தந்தையின் இறுதிச் சடங்கில் பங்கேற்றது குடும்பப்பற்று, உங்கள் முன்னே விளையாடியது நாட்டுப்பற்று. இன்றைய செஞ்சுரியை மிகச் சிறந்த சதம் என்று சொல்ல முடியாது. ஆனால், ஒரு இறுக்கமான மற்றும் சோகமான சூழலில் நான் அடித்த சதம் என்று வேண்டுமானால் கூறலாம் என்றார் நாதழுத முழுக்க.

சச்சினைப் பாராட்டி அப்போதைய பிரதமர் செய்தி அனுப்பி இருந்தார். அதில் தந்தையை இழந்து நிற்கும் தனிப்பட்ட சோகம் பெரிய அளவில் பாதிக்காமல் மன உறுதியுடன் திகழ்ந்த உங்களைப் பாராட்டுகிறேன். அதே சமயம் அந்த மன உறுதியையும் திடத்தையும் கிரிக்கெட் விளையாட்டில் காட்டி சாதனை படைத்திருக்கிறீர்கள்.

### ஏழாவது உலகக் கோப்பை போட்டிகள்!

இன்றைய இளைஞர்களுக்கு நீங்கள் வழிகாட்டி மட்டுமல்ல. உதாரண புருஷரும்கூட. இந்த தேசம் உங்களைப் பார்த்து பெருமைப்படுகிறது என்று வாழ்த்தியிருந்தார். மெய் வருத்தம் பாரார். பசி நோக்கார் கண் துஞ்சார், கருமமே கண்ணாயினர் என்ற பழமொழிக்கு சச்சினைத் தவிர வேறு யாரை உதாரணம் காட்ட முடியும்.

முதுகு வலி ஒருபுறம் சச்சினை அவ்வப்போது பயமுறுத்திக் கொண்டிருக்க இன்னொரு புறம் சச்சின் மீண்டும் கேப்டன் ஆக வேண்டும் என்று வற்புறுத்தல் பல்வேறு நபர்களிடம் இருந்து வந்து கொண்டிருந்தது.

தெனாலிராமன் கதையில் வரும் சூடு கண்ட பூனைபோல் ஒருமுறை கேப்டனாக இருந்துபட்டதுபோதும். அந்த வம்பேவேண்டாம். பேட்டிங்கில் கவனம் செலுத்துவதுதான் எதிர்காலத்திற்கு நல்லது என்ற முடிவிற்கு வந்து கேப்டன் பதவியில் இருந்து ஒதுங்கி உள்ள நிலையில் மீண்டும் எழுந்துள்ள சர்ச்சை சச்சினைக் கவலைப் படுத்தியது.

(தொடரும்)

கே. ரமேஷ்


# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

...இது இரக்கம்! யாராவது தங்களின் கணவர் உடல்நிலை சரியில்லை என்று உங்களிடம் சொன்னால், நீங்கள் அவர்களிடம் சொல்கிறீர்கள். ஆ! எவ்வளவு கஷ்டம், நீங்கள் மிகவும் வருத்தத்தில் இருக்க வேண்டும். கவலைப்படாதீர்கள். எல்லாம் சரியாகிவிடும். இரக்கத்தின் பெயரால், நாம் அவர்களது கஷ்டங்களை உறுதி செய்கிறோம். அவர்களும் நாம் அவர்கள்மீது அக்கறை காட்டுவதாகக் கூறி அதற்காக நம்மீது அன்பு செலுத்துகிறார்கள்.

உண்மையில் அவர்கள் நம்மீது அன்பு செலுத்துவதற்குக் காரணம், நாம் அவர்கள் மிகவும் கஷ்டப்படுவதாகக் கூறியது அவர்களைத் திருப்திப்படுத்துவதால்தான். அது அவர்களது அஹங்காரத்திற்கு கிடைத்த நுட்பமான ஊக்கமாகும். அவர்கள் பெரிய கவலைகளை சமாளிக்கிறார்கள் என்பதை நாம் ஆமோதிப்பதால் அவர்கள் சந்தோஷமடைகிறார்கள். இதைத்தான் சமூகம் இரக்கம் என்கிறது.

ஆனால், குருமார்களின் உணர்வு ஒருபோதும் இரக்கம் அல்ல. அது மற்றவர்களின் உணர்வுடன் ஒன்றுதல் என்பது, இன்னொருவரின் துன்பத்தை நமது இருப்புத் தன்மையும் உணர்வது. அப்பொழுது ஒருவன் தன் துயரத்தை உங்களிடம் சொல்ல வேண்டாம். அது உங்களுக்கே தெரியும். ஏனெனில், உங்களுள் உள்ள பிரபஞ்ச இருப்புச் சக்தி அதை உணருகிறது.



குருமார்கள் உங்களுடன் ஒன்றாக இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் ஒன்றாக இருக்கிறார்கள் நீங்களும் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் ஒரு பகுதிதான். நீங்கள்தான் அவரைப் பிரித்துப் பார்க்கிறீர்கள். அவர்கள் உங்களுடன் ஒன்றாக இருப்பதால் உங்கள் வலியை அவர்களது இதயத்தில் உணர்கிறார்கள். வேறு எந்த வழியிலும் தெரிந்து கொள்வதில்லை. அதனுடன் சேர்ந்து வரும் துன்பங்களை ஏற்றுக்கொள்ளும் சக்தியும் அவர்களிடம் இருக்கிறது.

சாதாரண அன்பினால் குழந்தைகள் பிறக்கிறார்கள். உண்மையான அன்பினால் உங்களுடைய உண்மையான சுயம் பிறக்கிறது. நீங்களே உங்களுக்கு ஒரு புதிய பிறப்பை ஒரு உருமாற்றத்தைக் கொடுக்கிறீர்கள். எப்படி ஒரு கம்பளிப்புழு வண்ணத்துப்பூச்சியாக மாறுகிறதோ, அதே போல மனிதனும், தன்னை உணர்ந்த ஆத்மாவாகிறான். இத்தனை காலமும் உறங்கிக் கிடந்த சக்தியூட்டும் அன்பிற்கு நீங்கள் விழி த்துக் கொள்கிறீர்கள்.

விவேகானந்தர் எழுமின்! விழிமின்! என்று சொல்லும் பொழுது நாம் உறங்கிக்கொண்டிருக்கிறோம் என்றா பொருள்? அப்படித்தான்! நாம் உறங்கிக் கொண்டிருக்கிறோம் என்பது கூடத் தெரியாமல் உறங்கிக் கொண்டிருக்கிறோம். உறக்கத்திலேயே மற்றவர்களை எடைபோட்டுக் கொண்டிருக்கிறோம்.

### ஆன்மீகம் 45

உறக்கத்திலேயே நாம் மற்றவர்களை விமர்சனம் செய்துகொண்டிருக்கிறோம். உறக்கத்திலேயே குற்றம் கூறிக்கொண்டிருக்கிறோம். நாம் விழித்துக்கொண்டிருப்பதாக நினைத்து நாம் விமர்சனம் செய்துகொண்டிருக்கிறோம். நமக்கு எல்லாவற்றைப் பற்றியும் எல்லாமும் தெரியும். அன்பையும் சேர்த்து என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்வுடனும் மாண்புடனும் வாழ்வதற்கான மார்க்கங்கள் யாவும் அடைக்கப்பட்டுவிட்டன என்று எண்ணிவிடாதீர்கள்

## சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினச்செய்தியில் வாழ்வகத்தலைவர் நம்பிக்கை

உலகெங்கும் பரந்து வாழும் விழிப்புலவலுவிழந்த உடன் பிறப்புக்களே சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினமான இன்று, உங்கள் உள்ளங்களோடு உறவாடக் கிடைத்த இந்த உன்னத வாய்ப்புக்காக முதற்கண் இறைவனுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விழிப்புல வலுவிழப்பு என்பது நாம் விரும்பி வரித்துக்கொண்ட ஒன்றன்று. நமக்கு அப்பாற்பட்ட வகையில் இந்நிலை நமக்கு ஏற்பட்டு விட்டது.

இருந்தபோதிலும் இம் மண்ணில் நாம் மகிழ்வுடனும் மாண்புடனும்வாழ்வதற்கானமார்க்கங்கள் யாவுமே அடைக்கப்பட்டு விட்டன என்றுமட்டும்ஒருபோதும் எண்ணிவிடாதீர்கள்.

பணிப்பவனுக்குத்தான்பாதைகள் சொந்தமானவை. வெறுமனே படுத்துறங்குபவனுக்கு முன்னால் எந்தப்பாதை விரிந்து கிடந்தாலும் எவ்வித பயனும் ஏற் படாது.

இனிய உறவுகளே, உங்கள் வாழ்க்கையை இனிமையான தாய், அர்த்தம் நிறைந்ததாய் ஆக்கிக் கொள்வது உங்கள் கையிலே தான் உள்ளது.

வாழ்க்கைப் பாதையில் உறுதியாய் நிதானமாய் நடைபயில உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள். இன்றைய நவீன உலகின் வளர்ச்சிகள் உயர்ச்சிகள் அறிவியல் சாதனைகள் யாவுமே நமக்கும் சொந்தமானவை என்பதை உங்கள் மனங்களில் ஆழப்பதித்துக் கொள்ளுங்கள் எப்போதும்புதிதுபுதிதாய்க் கற்றுக்கொண்டேயிருங்கள்.

புதிய புதிய துறைகளுக்குள் பிரவேசித்து அங்கே உங்களை நிலைப்படுத்திக் கொள்ளுங்கள் நீங்கள் வெற்றிகரமாய் ஒரு புதிய துறைக்குள் பிரவேசிக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்களையொத்த எண்ணற்ற உடன்பிறப்புக்கள் ஏற்றங்காண ஒரு புதிய மார்க்கத்தைச் சமைக்கின்றீர்கள் என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள்.

கணனி என்னும் கடலில் நீந்திக் கரை காணுங்கள். மூழ்கி முத்தெடுங்கள் முடியாவிட்டால் அதில் உங்கள் கால்களையாவது நனைத்துக் கொள்ளுங்கள்.

இதுவரை நீங்கள் சாதித்ததைவிட இன்னும் இன்னும் புதிதாய் எதையாவது சாதிக்க முயலுங்கள். உங்களால் முடியாது என மற்றவர்களால் கூறப்படும் ஆரூடங்களைக் கண்டு ஒருபோதும் அஞ்சிவிடாதீர்கள்.

மாறாக அவற்றையே மூலதனமாக வைத்துக்கொண்டு முன் நோக்கி நடவுங்கள்.

ஒரு காலத்தில் சாத்தியமற்றவை என்று கருதப்பட்ட பல விடயங்கள் இன்று சாத்தியமாகவில்லையா? பொய்யானவை என்று கருதப்பட்டவை இன்று மெய்யானவையாக வில்லையா? இல்லாதவை என்று கருதப்பட்டவை இன்று இருக்கின்றவையாகவில்லையா? அதுபோலவே உங்களால் முடியாது என்று கூறப்படுகின்ற பல ஆரூடங்கள் நிச்சயம் நாளை பொய்யாகும். பொடிப்பொடியாகும். விடாமுயற்சியும்கடினஉழைப்பும் நிச்சயமாக உங்களுக்கு மாபெரும் வெற்றியை பெற்றுத் தரும்.

இனியஉறவுகளே, உங்கள்வாழ்க்கையின் இலட்சியப் பயணத்தை இன்றே ஆரம்பியுங்கள். அந்த இலட்சியப் பயணத்தின் போது ஒரு விடயத்தை மட்டும் மனதிலிருத்திக் கொள்ளுங்கள்.



உங்களுக்குக்கிடைக்கின்ற அரிய வாய்ப்புக்களை உங்களை யொத்த உடன்பிறப்புக்களும் பெற்றுக் கொள்ள வழிசெய்யுங்கள். அந்த அரிய கைங்கரியம் அவர்களை மட்டுமல்ல உங்களையும் உயர்த்தும் என்பதை மறந்துவிடாதீர்கள். உதவி பெறுவோர் என்ற நிலையிலிருந்து உதவி புரிவோர் என்ற உயர் நிலையை நாம் எட்டிப் பிடிக்க நிச்சயம் இதுவழிசமைக்கும்.

உங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வெள்ளைப்பிரம்பு தின வாழ்த்துக்கள்.

**ஆ.ரவீந்திரன்**
தலைவர்,
வாழ்வகம்,
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## சீந்தில்

Botanical Name: Tino spora cordifolia
Family- Menispermaceae
Engl-Heart Leaved moon seed
Sinh-Rasahinda



பருத்த ஏறுகொடியானது (Climber). பெரிய மரங்களின் மேல் இக்கொடி படர்ந்திருக்கும். வேப்ப மரத்தின்மேல் படர்ந்திருப்பது சிறப்பாக கருதப்படுவது ஆராயப்பட வேண்டிய விடயமாகும். சீந்தில் கொடியானது வேதகாலத்தில் அறியப்பட்ட பழம்பெரும் மூலிகையாகும். சீந்திலின் முற்றிய கொடிகளின் இலைக்கணுக்களில் இருந்து, தாழையில் இருப்பது போல் நூல் போன்ற மெல்லியவிழுதுகள் (Aerial- roots) இறங்கும். பட்டை சாம்பல் கலந்த மண்ணிறம். இலைகள் இருதய வடிவானவை. பூக்கள் சிறியவை. மஞ்சள் நிறமுடையவை இலைத்துண்டங்கள் மூலம் இனவிருத்தியடையக் கூடியன.

இதனுடைய இலை, முற்றிய தண்டு ஆகியன மருத்துவகுணம் நிறைந்தவை.

சீந்தில் இலைகளில் கிரந்தி எண்ணெயை பூசி தணலில் மெதுவாக வாட்டி குழந்தைகளுக்கு நெஞ்சில் சளி கட்டியிருந்தால் பூச அவ்வை பழுக்கும்.

இலையை அனலில் வாட்டிப் புண்களின் மீது போட்டுவர புண்கள் இலகுவில் ஆறும்.

சீந்தில் நீர்க்கண்டம் தெரிசுக்கு தேன் அளாய் என்று திருவள்ளுவர் மாலை சிறப்பிக்கும் மருந்து சீந்தில். இதனால் நாவறட்சி, எரிச்சல், நீரிழிவு, இருமல், குஷ்டம் எனும் ஒரு வகை தோல்வியாதிகள் தீரும். இலக்கியத்தில் சீந்தில் வஞ்சிக்கொடி எனும் பெயரில் கூறப்பட்டுள்ளது.

மேகமெனும் பாதகத்தால் வெந்த உயிர்ப்பயிரைக் காக்கும் ஆற்றல் உள்ளது சீந்தில். மதுமேகம் எனும் நீரிழிவு நோயில் தோன்றும் நீர் வேட்கையை கைகால்களில் ஏற்படும் திமிரை, பதினெட்டு வகையான குஷ்ட நோயை யானைத்தோல் நோயை போக்குவதோடு வெப்பிணியையும் நீக்கும் தன்மையுள்ளது.

இதற்கு சீந்தில்மா (அமுது சர்க்கரை) ஆக சீந்திலை தயாரித்து பயன் படுத்தல் வேண்டும்.

நன்றாக முற்றிய சீந்தில் கொடியை (தண்டை) சிறுசிறு துண்டுகளாக நறுக்கிப் பொடித்து குளிர்ந்த நீர் விட்டு மறுநாள் கடைந்து திப்பிலியை கசக்கிப் பிழிந்து எடுத்து நீர்விட்டு வெயிலில் 2 அல்லது 3 மணி நேரம் வைக்க நீர் தெளியும். அந்த நீரை இறுத்து விட்டு, வேறு நீர் விட்டு கலக்கி மேற்கண்டபடியே நீரை இறுத்தூர் சுண்ணம்விட்டு மறுபடியும் நீரை இறுத்தெடுத்தபின் அடியில் படிந்திருக்கும் மாவே சீந்திற் சர்க்கரை/ சீந்தில்மா எனப்படும்.

இதை உலர்த்தி வாயிலிட கைப்பாக இருக்கும். இம்மா நீரிழிவைத் தவிர காய்ச்சல்,இருமல் போன்ற நிலைமைகளிலும் பயன்படுத்த லாம். இதற்குரிய மருத்துவப் பண்புகள் குன்றாது இருக்கவேண்டுமாயின் இக்கொடியின் கைப்பு மிக வேண்டும். இக்குணமேற்படுவதற்கு கொடி முதிர வேண்டும். முதிர்ந்த கொடியை கோடை காலத்தில் சேகரிக்க வேண்டும். முற்றிய கொடியாயிருந்தால் சீந்தில்மா வெண்மையாக இருக்கும். இதுவே தரமானதும்கூட. நீரிழிவு நோயாளிகள் 1-2 கிராம் வரை காலை, மாலை எடுக்கலாம்.

சீந்தில் இலைச்சாறு 5 மில்லியுடன் 5 மில்லி தேன்கலந்து குடித்து வர காமாலை நோய் நீங்கும்.

சீந்தில் தண்டு, சுக்கு, காஞ்சொறிவேர், இலந்தை ஒரேயளவு எடுத்து 4 பங்கு நீர்விட்டு 1/4ஆக குடிநீர் காய்ச்சி 30 மில்லி லீற்றர் கொடுக்க வாதசுரம் (வலியுடன் கூடிய காய்ச்சல்) நீங்கும்.

சீந்தில்மா ஒரு கிராம் தேனில் கலந்து கொடுக்க இருமல் தீரும்.

சீந்தில் தண்டையும் வில்வம் பட்டையை மேற்கூறிய முறையில் குடிநீர் செய்து அருந்தவாந்தி, செரியாமை நீங்கும்.

சீந்தில், நெல்லிக்காய், கற்றாழை, கையாந்தகரை சாறு ஒவ்வொன்றும் ஒரு லீற்றர் வீதம் எடுத்து பசு வின் பால் 4 லீற்றர், நல்லெண்ணெய் 2 லீற்றர், அதிமதுரம் 150 கிராம் கலந்து காய்ச்சி வடித்து தலைக்கு தேய்த்து உடலுக்கும் பூசி வர பித்த ரோகங்கள் தீரும்.

சீந்தில்மா, பெருஞ்சீரகப்பொடி கலந்து ஒரு கிராம் அளவு எடுக்க உடல் எரிச்சல் காய்ச்சல் நீங்கும். சீந்தில் தண்டு சிற்றாமுட்டி வேரை குடிநீர் செய்து திப்பிலிக்கொடி ஒரு கிராமுடன் கலந்து எடுக்க வாத, பித்த சுரங்கள் (காய்ச்சல்) தணியும்.

சீந்தில் தண்டு, வெங்காயம் இரண்டையும் இடித்துச் சாறாக்கி 10 மில்லி அளவு வெள்ளாட்டுப் பாலில் கலந்து சீரகப்பொடி தூவிக் குடிக்க மேகரோகம், நீரிழிவு, குஷ்ட ரோகம் எனும் நாட்பட்ட தோல் வியாதி தீரும்.

மேற்றோல் நீக்கிய சீந்தில் தண்டைச் சிதைத்து பாலில் போட்டு காய்ச்சி வடிகட்டிய பாலைக்குடிக்க மேகரோகங்கள் நீங்கும்.


சீந்தில் தண்டு, மிளகு சமஎடை எடுத்து அரைத்து 1-2 கிராம் அளவு வெந்நீரில் கலந்து கொடுக்க இதயம் வலுவடையும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மான்னா சும்மா இல்லேடா! அவ இல்லேன்னா யாருமில்லேடா!

## அக்ரஹாரா வளாகத்தில் ஒலிக்கும் பாடல்



கர்நாடகாவுக்கு சுற்றுலா வருபவர்கள் பார்க்க வேண்டிய இடங்களின் பட்டியலில் இப்போது பரப்பன அக்ரஹாராவும் சேர்ந்திருக்கிறது.

ஜெயலலிதா அடைக்கப்பட்டிருக்கும் சிறையைப் பார்க்க வேண்டும் என்பதற்காக பஸ்கள் பரப்பன அக்ரஹாரா பக்கம் ஒரு ரவுண்ட் வந்து திரும்புகிறது. "இங்கதான் அம்மாவை புடிச்சு வெச்சுருக்காங்க... "என்று சொல்லி பரப்பன அக்ரஹாரா சிறைக்குச் செல்லும் சாலையை வேடிக்கை பார்த்தபடியே பஸ்ஸில் ஏறி கிளம்புகிறது ஒரு கூட்டம். தர்மபுரி பக்கமிருந்து மைசூருக்கு சுற்றுலா வந்த கிராமத்து மக்கள் அவர்கள். ஏதோ சுற்றுலாவுக்கு வந்த ஜெயலலிதாவை கர்நாடக அரசு பிடித்துவைத்துக் கொண்டதைப் போலவே அவர்களின் பேச்சும் எண்ணமும் இருந்தது.

**"என் தாயெனும் கோயிலை காக்க மறந்திட்ட பாவியடி கிளியே!"**

சென்னையைச் சேர்ந்த குத்துச்சண்டை வீரர் கலையரசன் தலைமையில் 15 பேர் கொண்ட குழுவினர் நடைபயணமாகவே பரப்பன அக்ரஹாரா வந்து சேர்ந்தனர். "நிறையப் பேரு கிளம்பினோம். ஆனால், எல்லோராலும் நடக்க முடியலை.

பாதியிலேயே திரும்பிட்டாங்க. அம்மா இல்லாம இங்கேயிருந்து கிளம்ப மாட்டோம்! என்று உணர்ச்சிவசப்பட்டார் கலையரசன்.

பரப்பன அக்ரஹாரா சிறைக்கு வரும் அ.தி.மு.க நிர்வாகிகள் அங்குள்ள சிறைக் காவலர் குடியிருப்புப் பகுதியில்தான் காரை நிறுத்திவிட்டு காத்திருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் காரில் சத்தமாகப் பாடல்களை ஒலிக்க விடுகின்றனர்.

"அம்மான்னா சும்மா இல்லடா... என் தாயெனும் கோயிலை காக்க மறந்திட்ட பாவியடி கிளியே...' என அம்மா சென்டிமென்ட் பாடல்கள் காரில் சத்தமாக ஒலித்தபடியே உள்ளன.

இந்தப் பாட்டு சத்தத்தில வீட்டுல இருக்கவே முடியலை! என்று அங்கே குடியிருக்கும் பெண்கள் புகார் செய்ய... இப்போது கெடுபிடி இன்னும் அதிகமாகிவிட்டது.

**சந்திர கிரகணத்துக்கு முன்பு....**

"சந்திர கிரகணத்துக்கு முன்பு எப்படியும் ஜாமீன் வாங்கிவிட வேண்டும்!' என்று சொல்லி வந்திருக்கிறார் ஜெயலலிதா. கடந்த 7ஆம் திகதி நிச்சயம் பிணை கிடைத்துவிடும் என மிகுந்த நம்பிக்கையோடு காத்திருந்தார்கள் சிறையில் உள்ள ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் நால்வரும். மதியமே அவர்களுக்கு பிணை கிடைத்துவிடும் என்று தெரிவிக்கப்பட்டது.

8ஆம் திகதி சந்திர கிரகணம் என்பதால் எவ்வளவு நேரம் ஆனாலும் 7ஆம் திகதி இரவே நம் வீட்டுக்கு சென்றுவிட வேண்டும் என்று முடிவு செய்து தயார் நிலையில் இருந்தார்கள்.

ஆனால், பிணை கிடைக்கவில்லை என்றதும் நான்கு பேரும் ரொம்ப அப்செட் ஆகிவிட்டார்கள். பிணை இல்லை என்ற தகவல் ஜெயலலிதாவை ரொம்பவே அப்செட் ஆக்கியதாகச் சொல்கிறார்கள். சந்திர கிரகணம் அன்று ஜெயலலிதா தன் அறையைவிட்டு வெளியே வரவே இல்லையாம். கிரகண நேரம் முடிந்ததும், குளித்து முடித்துவிட்டு சில மந்திரங்களை உச்சரித்து விட்டுதான் இரவு உணவு எடுத்துக் கொண்டாராம்.

பிணை மனுவை விசாரித்த நீதிபதி சந்திரசேகரா, ஊழல் என்பது மனித உரிமை மீறல், மனித சமுதாயத்துக்கு எதிரானது. நாட்டின் முன்னேற்றத்தை சீரழித்துவிடும் என்று குறிப்பிட்டதைத் திரும்பத் திரும்ப டி.வி-யில் பார்த்திருக்கிறார்.



செக்போஸ்ட் முன்பு கூட்டம்

அன்று யாரிடமும் பேசவில்லையாம். மாலை அவரை பரிசோதித்த வைத்தியர்கள், இரத்த அழுத்தம் கொஞ்சம் அதிகமா இருக்கு. அவங்க ரெஸ்ட் எடுக்கட்டும்!' என்று சசிகலாவிடம் சொன்னார்களாம்.

**"தீபாவளிக்குள் அக்கா வீட்டுக்குப் போகணும்!'**

உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வதற்காக ஜெயலலிதாவிடம் கையெழுத்து வாங்க சட்டத்தரணிகள் சிறைக்குள் சென்றார்கள். அவர்களை சந்தித்தது சசிகலாதான்! சட்டத்தரணிகள் கொண்டு வந்த பிரசாதங்களை வாங்கிக் கொண்டவர், வக்காளத்து பேப்பரையும் அவர்தான் வாங்கிக்கொண்டு போய் ஜெயலலிதாவிடம் கையெழுத்து வாங்கி வந்தாராம். "உச்ச நீதிமன்றத்திலும் சூழ்நிலை சரியில்லைன்னு அக்கா நினைக்கிறாங்க. எப்படியாவது முயற்சி செஞ்சு பிணை வாங்கிடுங்க. தீபாவளிக்குள்ள அக்கா வீட்டுக்குப் போகணும்!' என்று சட்டத்தரணிகளிடம் கடுமையாகவே சொன்னாராம் சசிகலா. சுதாகரனிடமும் கையெழுத்து வாங்க அவருடைய சட்டத்தரணிகள் உள்ளே சென்றனர். அப்போது சுதாகரன், நான் ரொம்ப நல்லா இருக்கேன். எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. வீட்டுல இருந்ததைவிட இங்கேதான் நான் அமைதியாக தியானம் செய்றேன். எனக்கு பிணை இல்லைன்னு சொன்னதைப் பற்றி எந்தக் கவலையும் இல்லை. ஆனால், அவங்களை நினைச்சாதான் பாவமா இருக்கு. எனக்கு பிணை மறுத்தாலும் பரவாயில்லை. அவங்களை விரைவில் வெளிய விட்டுடணும் என்றாராம். அவங்க என்று அவர் சொன்னது ஜெயலலிதாவை.

**உள்ளே ஜெ... வெளியே வேலுமணி!**

சிறைக்கு வெளியே காத்திருக்கும் எம்.எல்.ஏ-க்களுக்கும், முக்கிய நிர்வாகிகளுக்கும் தினமும் மதியம் சிக்கன் பிரியாணியும், வெரைட்டி ரைஸும் அவைத் தலைவர் மதுசூதனன் காரில்தான் செல்கிறது. பெங்களூரில் உள்ள பிரபல அசைவ ஹோட்டல் ஒன்றிலிருந்து தினமும் சாப்பாடு கொண்டுவரும் பொறுப்பை அவரே கவனித்துக் கொள்கிறார். உள்ளாட்சி, சட்டம், நீதி மற்றும் சிறைச்சாலை துறை அமைச்சர் வேலுமணி ஒவ்வொரு நாளும் காலையில் தவறாமல் ஆஜராகி விடுகிறார்.

> "பரப்பன அக்ரஹாரா சிறைகக்கு வரும் அ.தி.மு.க நிரவாகிகள் அங்குள்ள சிறைக் காவலர் குடியிருப்புப் பகுதியில்தான் காரை நிறுத்தி விட்டு காத்திருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் காரில் சத்தமாகப் பாடல்களை ஒலிக்க விடுகின்றனர். "அம்மான்னா சும்மா இல்லடா... என் தாயெனும் கோயிலை காக்க மறந்துட்ட பாவியடி கிளியே...' என அம்மா சென்டிமென்ட் பாடல்கள் காரில் சத்தமாக ஒலித்தபடியே உள்ளன."

மாலை வரை யாரைப் பற்றியும் கவலைப்படாமல் மரத்தடியில் உட்கார்ந்துவிடுகிறார். அவருக்கும் மதிய உணவு அங்கேயே வருகிறது. ஜெயலலிதாவுக்கு பிணை மறுக்கப்பட்ட பின்பு பரப்பன அக்ரஹாராவுக்கு வரும் தொண்டர்கள் கூட்டம் ரொம்பவே குறைந்துவிட்டது. அமைச்சர்களும், முக்கிய நிர்வாகிகளும் வருவதும் போவதுமாக இருக்கிறார்கள்.

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் முடிவுக்கு வருமா இராணுவ நெருக்குவாரங்கள்?



வடக்கு மாகாணத்தில் எல்லாவற்றையும் படையினர் உளவு பார்ப்பதாக நியூ இந்தியன் எக்ஸ்பிரஸின் கொழும்புக்கான செய்தியாளரிடம் ஒப்புக்கொண்டிருக்கிறார் கிளிநொச்சி படைத் தலைமையகத் தளபதியான மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க.

போர் முடிவுக்கு வந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகியும் வடக்கு மாகாணம் இன்னமும் ஒரு போர் வலயம் போன்றே காட்சியளிப்பதாக தொடர்ச்சியான விமர்சனங்கள் இருந்து வருகின்றன.

அளவுக்கதிகமாக குவிக்கப்பட்டுள்ள படையினரும், இராணுவத் தளங்களும் எந்நேரமும் எல்லாவற்றையும் உன்னிப்பாகக் கண்காணித்துக் கொண்டிருக்கும் புலனாய்வாளர்களும், வடக்கின் இயல்பு வாழ்வுக்கு இடையூறாக இருந்து வருகின்றனர்.

போர் நடந்து கொண்டிருக்கும் சூழலில் இத்தகைய இராணுவ நெருக்குவாரங்கள் இருப்பது வழமை.

போருக்குப் பின்னர் அதுவும் அரை தசாப்தகாலம் கடந்து விட்ட பின்னரும் அதே இராணுவ நெருக்குவாரங்களின் கீழ் வாழ்வதற்கு மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதை இயல்பானதாகக் கொள்ள முடியாது.

வடக்கில் மாத்திரம் 67 ஆயிரம் காணிகள் இராணுவத் தேவைக்காகவும் சிங்களக் குடியேற்றங்களுக்காகவும் அபகரிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சபையில் கடந்த வாரம் புள்ளிவிபரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இது எந்தளவுக்கு வடக்கின் இயல்புச் சூழலை மாற்றியமைத்திருக்கும் என்பதை விளங்கிக் கொள்ளப் போதுமான தரவாகும். காணி அபகரிப்பின் ஊடாக அந்தக் காணிகளில் படைத்தளங்களையும், சிங்களக் குடியேற்றங்களையும் நிறுவுவதன் ஊடாக ஒரு பெரும் பாதுகாப்புத் தந்திரோபாயத்தை அரசாங்கம் கையாண்டு வருகிறது.

சிங்களக் குடியேற்றத்தின் மூலம் தமிழர்களின் தாயகப் பிரதேசமான வடக்கும் கிழக்கும் நில ரீதியாக கொண்டிருந்த தொடர்பைத் துண்டிக்க ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்திலேயே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பாலஸ்தீன நிலப்பரப்பை தனது இராணுவக் குடியிருப்புக்களின் மூலம் எவ்வாறு இஸ்ரேல் ஆக்கிரமிதுக் கொண்டதோ அதுபோன்ற தந்திரத்தைப் பயன்படுத்தி திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களின் நிலவழித் தொடர்பைத் துண்டிப்பதற்காக வெலிஓயா என்ற சிங்களக் குடியேற்றப் பிரதேசம் உருவாக்கப்பட்டது.

பின்னர், இந்தப் பிரதேசம் அநுராதபுர மாவட்டச் செயலகத்துடன் இணைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது.

இப்போது இந்தப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றங்கள் இராணுவத்தினரின் ஆதரவுடன் வேகமாக மேற்கொள்ளப்படுகின்றன. புதிது புதிதாக வீடுகள், விகாரைகள், பாடசாலைகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

அடிப்படை உட்கட்டுமான வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

சிங்களக் குடியேற்றவாசிகளை ஊக்கப்படுத்தும் வகையில் பணமாகவும் பொருளாகவும் இராணுவத்தினர் மற்றும் பிற அமைப்புகளின் மூலம் உதவிகள் வழங்கப்படுகின்றன.

வடக்கு மாகாணத்துக்கு உருவெடுத்துள்ள பெரும் அச்சுறுத்தலாக இந்த வெலிஓயா சிங்களக் குடியேற்றங்கள் மாறியுள்ளன.

போதாக்குறைக்கு முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒதுக்கப்படும் வளங்களையும் வெலிஓயா பிரதேச செயலகமே அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் உறிஞ்சிக் கொள்கிறது.

போர்க்காலத்தில் தமிழரின் தாயகக் கோட்பாட்டை சிதைக்கும் நோக்கிலும், வடக்கு கிழக்கிற்கிடையிலான விடுதலைப் புலிகளின் நகர்வுகளை துண்டிக்கும் நோக்கிலும் உருவாக்கப்பட்டு பலப்படுத்தப்பட்ட வெலிஓயா சிங்களக் குடியேற்றங்கள் போருக்குப் பின்னரும் விரிவாக்கப்பட்டு வருகின்றன.

இது அடுத்தகட்ட பாதுகாப்புத் திட்டமாகும். அதாவது வடக்கில் இப்போது தமிழர்களே பெரும்பான்மையினர் என்ற நிலை காணப்படுகின்றது.

சிங்களக் குடியேற்றங்களின் ஊடாக வடக்கின் இனப்பரம்பலை மாற்றியமைத்து படிப்படியாக தமிழரின் பெரும்பான்மையை இல்லாமல் செய்வதே இதன் அடிப்படைத் திட்டமாகும்.

வடக்குத் தமிழரின் வெளிநாட்டு மோகம் புலம்பெயர்வு பாதுகாப்பற்ற நிலை போன்ற காரணிகள் அரசாங்கத்தின் இந்தத் திட்டத்துக்கு மேலும் வலுவூட்டச் செய்கின்றன.

இத்தகைய பின்புலத்தில்தான், வடக்கின் மீதான இராணுவக் கண்காணிப்பும் படைக்குவிப்பும் இடம்பெற்று வருகின்றன.

வடக்கில் படையினர் எல்லாவற்றையும் கண்காணித்து வருகின்றனர். எல்லாத் தகவல்களையும் சேகரித்துக் கொள்கின்றனர் என்று கூறியிருக்கிறார் கிளிநொச்சி படைத் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க.

விடுதலைப் புலிகள் மீண்டும் எழுச்சி பெற்று விடுவதை தடுப்பதற்காகவே இவ்வாறான பாதுகாப்பு முன்னேற்பாடு மேற்கொள்ளப்படுவதாகவும் அரசுக்கு எதிரான எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகிறதா? என்று மட்டுமே படையினர் கண்காணித்து வருவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

தனிப்பட்ட பொது நிகழ்வுகள், கூட்டங்களில் இவ்வாறு மேற்கொள்ளப்படும் உளவு நடவடிக்கை பொதுமக்களைப் பாதிக்கவில்லை என்றும் அவர் நியாயப்படுத்தியிருக்கிறார்.

ஒரு இராணுவத் தளபதியின் நிலையில் இருந்து அவர் இதனைப் பார்க்கிறாரே தவிர சாதாரணப் பொதுமக்களின் நிலையில் இருந்து அது எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அவரால் விளங்கிக் கொள்ள முடியாது.

எந்நேரமும் படையினர் தம்மைக் கண்காணிக்கின்றனர் என்பதைத் தெரிந்து கொண்டே தமிழ் மக்கள் தமது அன்றாடப் பணிகளை ஆற்றுவதென்பது இயல்பான தொன்றாக இருக்க முடியாது.

அது ஏதோ ஒரு வகையில் வடக்கிலுள்ள மக்களின் இயல்பு வாழ்வைக் குழப்பிக் கொண்டேயிருக்கும். இதனை திறந்தவெளிச் சிறை என்று ஒப்பிடுவதில் தவறில்லை.

விடுதலைப் புலிகளால் இனிமேல் மீண்டெழுவே முடியாது என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவும், இராணுவத் தளபதிகளும் அடித்துக் கூறுகின்றனர்.

அவ்வாறிருந்தும், எதற்காக வடக்கை இந்தளவுக்கு இராணுவ நெருக்குவாரங்களுக்கு உட்படுத்த வேண்டும்? பத்து லட்சம் மக்கள் வாழும் வடக்கில், சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான படையினர் குவிக்கப்பட்டுள்ளதாக கடந்த வாரமும் அமெரிக்க பிரதிநிதிகள் குழுவொன்றிடம் தெரிவித்திருக்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன்.

அரசாங்கமோ இந்தக் குற்றச்சாட்டை நிராகரிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் வெறும் 15 ஆயிரம் படையினர்கூட இல்லை என்றே சாதித்து வருகிறது.

யாழ். குடாநாட்டில் மாத்திரம் ஒரு படைத்தலைமையகத்தின் கீழ் 51, 52, 55 என மூன்று டிவிஷன் படையினர் நிலைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

அதுபோல முல்லைத்தீவிலும், கிளிநொச்சியிலும், வவுனியாவிலும் தலா ஒவ்வொரு படைத் தலைமையகங்கள் இருக்கின்றன.

வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களில் மன்னார் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களிலுமே தனித்தனியான படைத் தலைமையகங்கள் உள்ளன.

ஆனால் வடக்கிற்கு வெளியே கிழக்கு மத்திய தெற்கு மேற்கு என்று மாகாணத்துக்கு ஒரு படைத் தலைமையகமே இருக்கின்றது. சில மாகாணங்களில் ஒன்று கூட இல்லை.

இந்த நிலையிலும் கூட நாட்டின் ஏனைய பகுதிகளைப் போலவே வடக்கிலும் படையினர் நிறுத்தப்பட்டுள்ளதாக நியாயம் கூறுகிறது அரசாங்கம்.

வடக்கில் குவிக்கப்பட்டுள்ள படையினரால்தான் அதிகளவு நிலங்களும் பறிக்கப்பட்டுள்ளன.

படையினரை வெளியேற்றினால் வடக்கில் நில ஆக்கிரமிப்பும் கணிசமாக முடிவுக்கு வரும் என்கிறது வடக்கு மாகாணசபை. அதற்காகவே வரும் டிசம்பருக்குள் தனியார் காணிகள், கட்டடங்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டும் என்று வடக்கு மாகாணசபை கடந்த வாரம் தீர்மானமொன்றை நிறைவேற்றியிருக்கிறது.

இதற்கு அரசாங்கம் செவிசாய்க்கும் என்று கருதுவதற்கில்லை.

அதேவேளை, குறித்த காலக்கெடுவுக்குள் படையினர் வெளியேற மறுத்தால் வடக்கு மாகாணசபை அடுத்து என்ன மேல் நடவடிக்கை எடுக்கும் என்று தெரியவில்லை.

தீர்மானம் நிறைவேற்றுவதற்கு அப்பால் அதனால் வேறு எதையும் செய்ய முடியாது என்பதே உண்மை நிலை.

அதேவேளை, கிளிநொச்சிப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ"க்கு அளித்த பேட்டியில் வடக்கில் படையினர் நிலைகொள்ள வேண்டுமா? என்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், வடபகுதி தமிழர்கள் அதற்கு ஆதரவாகவே வாக்களிப்பர் என்றும் கூறியிருக்கிறார்.

வடக்கு மாகாணசபையின் கடந்தவார அமர்வில் இதற்குப் பதில் கொடுத்திருக்கிறார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

படையினர் வடக்கில் இருக்க வேண்டும் என்று இங்குள்ள மக்கள் விரும்பவில்லை என்றும் படையினரை வெளியேற்றுவோம் என்ற வாக்குறுதியை முன்வைத்தே தமக்கு தேர்தலில் மக்கள் அளித்த ஆதரவே அதற்குச் சாட்சி என்றும் அவர் கூறியிருக்கிறார்.

வடக்கில் இராணுவம் பாதுகாப்புத் தேவை என்பதற்கு அப்பால், ஒரு அரசியல் தேவைக்காகவும் நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்பதே உண்மை.

வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலிலோ, நாடாளுமன்றத் தேர்தலிலோ இந்த விவகாரத்தை வடக்கின் அரசியல் தலைமைகள், தீர்க்கமான தெளிவான முறையில் கையாள்வது அவசியம்.

ஏனென்றால், கொழும்பின் ஆட்சியைத் தீர்மானிப்பதில் வடக்கு மாகாண வாக்காளர்கள் கணிசமான பங்கை ஆற்றும் வாய்ப்புக் கிடைக்கக்கூடும்.

இத்தகைய கட்டத்தில் இராணுவ நெருக்குவாரங்களிலிருந்து வடக்கை விடுவிப்பதை பேரம் பேசும் முக்கிய விடயமாக தமிழ் அரசியல் தலைமைகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த வாய்ப்பபைத் தவறவிட்டால், இன்னொரு சந்தர்ப்பம் கிட்டுவதற்கு நெடுங்காலம் காத்திருக்க வேண்டி வரலாம்.

சுபத்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலை எதிரணி பொதுவேட்பாளராக நிறுத்தப் போவதாக கூறவில்லையாம்

## பல்டியடித்த ஐ.தே.க

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை வேட்பாளராக நிறுத்த போவதாக தமது கட்சி எந்த இடத்திலும் கூறியதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேராதெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசும் போதே 'அவர் இதனை தெரிவித்தார்.

பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்தே ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின் அவர் யார் என்பது ஊடகங்களுக்கு தெரியப்படுத்தப்படும்.

அத்துடன் அரசாங்கமும் இதுவரை மகிந்த ராஜபக்ஷவை வேட்பாளராக அறிவிக்கவில்லை.

எனினும், பொருட்களின் விலைகளை குறைத்து அரசாங்கம் தேர்தலுக்கு தயாராகி வருகிறது.

அரசாங்கத்தின் கறுப்புச் சந்தை முதலாளி போன்ற இந்த செயல்களுக்கு மக்கள் பதில் வழங்க வேண்டும் எனவும் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி தேர்தலை நடத்தாமலேயே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி கோரியுள்ளது.

ஈழம் கோரிக்கையை கைவிட்டால் நிறைவேற்று ஜனாதிபதி முறையை கைவிடுவதாக ஜனாதிபதி கிளிநொச்சியில் வைத்து தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட ஜோசப் மைக்கல் பெரேரா, நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க ஜனாதிபதி தயாராக இருந்தால் ஏன்? ஜனாதிபதி தேர்தலை நடத்த வேணடும் என்று கேள்வி எழுப்பினார்.

இதேவேளை அரசியல் அமைப்பில் திருத்தத்தை கொண்டு வர ஐக்கிய தேசியக்கட்சி ஏற்கனவே ஜே.வி.பி உட்பட்ட கட்சிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளதாகவும் ஜோசப் மைக்கல் பெரேரா மேலும் தெரிவித்தார். (இ)

# எந்தவொரு நாட்டையும் பகைக்கப் போவதில்லை

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகளுடன் தொடர்ந்தும் நட்பு ரீதியான கொள்கைகளை கடைப்பிடிக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல சீலாரட்ன தேரரின் தலைமையிலான ஜனசத்த பெரமுனவை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த ரணில் விக்கிரமசிங்க, எந்த நாட்டையும் பகைத்துக் கொள்ளும் முயற்சியை மேற்கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்தார்.

இலங்கையை பொறுத்தவரையில் மேற்கத்தைய சந்தையும் அதேபோல இலங்கையர்களுக்கான தொழில் வாய்ப்புக்கு மத்திய கிழக்கும் அவசியமாகும் என்று ரணில் தெரிவித்தார்.

இதேவேளை அடுத்த ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அனைத்து கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை கருத்துரைத்த சீலாரட்ன தேரர் ரணிலுடன் 13ஆவது அரசியல் அமைப்பு குறித்தும் பேசப்பட்டதாக தெரிவித்தார். (இ)

# பெண்களுக்கான விசேட வங்கி



பெண்களுக்கு மட்டுமேயான தனியான விசேட வங்கியை 2015 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கவுள்ளதாக கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் டி.பீ. ஏக்கநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் யாப்பகூவ தேர்தல் தொகுதி கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த கூட்டம், கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமையவே இந்த சேவையை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# மகிந்தவின் அரசில் தற்போது பாரிய பிளவு ஏற்பட்டுள்ளது

## ஐ.தே.க எம்.பி. சுட்டிக்காட்டு



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசாங்கத்தில் பாரிய பிளவு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர் காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பொய்களை கேட்க மக்கள் தயாரில்லை.

எதிர்காலத்தில் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டால் ஆளும் கட்சியின் 36 முக்கியஸ்தர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வார்கள்.

இது தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியை சுற்றி சீனப் பெருஞ்சுவர் போல காணப்பட்ட சிங்கள பௌத்த வாக்குகள், தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது.

அன்று மொனராகலை மாவட்டத்தில் 82 வீத வாக்குகளைப் பெற்றுக்கொண்ட அரசாங்கம் இன்று 52 வீதத்தையே பெற்றுக்கொண்டுள்ளது.

தமிழ் தலைவர்களை சுற்றி வைத்துக் கொண்ட மகிந்தவிற்கு ஊவாவில் தமிழ் மக்களின் வாக்குகளையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

எதிர்வரும் தேசிய தேர்தல்களின் போது தமிழ்த் தலைவர்கள் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்படுவார்கள்.

முஸ்லிம் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஹக்கீம், பதியூதீன் கூட்டிணைந்து போட்டியிட்ட தந்திரத்தை மக்கள் புரிந்து கொண்டார்கள்.

ஊவா தேர்தலின் போது ஆளும் கட்சிக்கு நிகராக எதிர்க்கட்சிகள் தபால் மூல வாக்குகளைப் பெற்றுக்கொண்டன.

தேசிய தேர்தல் ஒன்றின் போது அரசாங்கம் பாரிய தோல்வியை எதிர்நோக்கும் என பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். (இ)

# இன்று ஒரு தகவல்

## சங்கீத சங்கடம்

எனக்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருவர் ஒருநாள் என்னைத் தேடி வந்தார். "நான் நாதஸ்வரம் வாசிக்க கற்றுக் கொள்ளப் போகிறேன்!" என்றார்.

நான் பயந்தே போய் விட்டேன். ஏனென்றால் அவரைப் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். அதனால் "உங்களுக்கு ஏன் இந்த விபரீத ஆசை! சங்கீதம் என்பது ஒரு சுகமான அனுபவம்! நாமும் கஷ்டப்பட்டு அதையும் கஷ்டப்படுத்த வேண்டாமே! என்றேன்.

அவர் அதைக் காதில் வாங்கிக் கொள்வதாகவே இல்லை. மிகவும் உறுதியுடன் இருந்தார். சரி... வேறு வகையில் அவரின் எண்ணத்தை மாற்றலாம் என்று நினைத்து, ஒரு நேயர் எனக்குத் தெரிவித்திருந்த ஒரு கதையை அவரிடம் சொன்னேன்.

ஒரு ஊரில் ஒரு கோயில் இருந்தது. அந்தக் கோயிலில் உள்ள ஸ்தல விருட்சத்தில் (மரம்) ஒரு பிரம்ம ராட்சசன் இருந்தான். அவன் ஒரு காலத்தில் பல பாவங்கள் செய்து சாபத்தினால் பிரம்ம ராட்சசனாக மாறியவன்.

சாப விமோசனத்துக்காக அந்த மரத்தில் காத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு உருவம் கிடையாது. அதனால் கண்களால் அவனைக் காணவும் முடியாது.

அந்தக் கோயிலில் ஒருவர் தினமும் நாதஸ்வரம் வாசிப்பார். வாசிக்கிறார் என்றே சொல்ல முடியாது. ஊதுவார் அவ்வளவுதான்! முறையாக பயிற்சி இல்லாதவர்.

தினமும் காலையிலும் மாலையிலும் வாசிப்பார். பிரசாதம் கொடுப்பார்கள். அதை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு மறுபடியும் வாசிப்பார். இப்படியே அவரது காலமும் போய்க் கொண்டிருந்தது.

ஒருநாள் அவர் நீண்ட நேரம் வாசித்து விட்டு, இரவு வீட்டுக்குப் புறப்பட்டார். அப்பொழுது அந்த மரத்திலிருந்த பிரம்ம ராட்சசன் அவரிடம் போய் பரிதாபமாக பேசியது.

"இதோ பார்.... என்னை நீ கண்களால் பார்க்க முடியாது. இருந்தாலும் நீ வாசிப்பதை தினமும் நான் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். எனக்கொரு உதவி செய்வாயா?" என்று கேட்டது.

"என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார் இவர். "இனிமேல் நீ வாசிப்பதை விட்டுவிட வேண்டும்!" என்றது. "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டார் இவர்.

"நான் ஏற்கனவே ஒரு பாவம் செய்து விட்டு சாப விமோசனத்துக்காக காத்துக் கொண்டிருந்தாலும் சங்கீத ஞானம் உள்ளவன்தான்.... நீ வாசிப்பது கொஞ்சம் கூட நன்றாக இல்லை. அபஸ்வரமாக இருக்கிறது!

என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை! இதேமாதிரி நீ தினமும் வாசித்தால் சாப விமோசனம் கிடைக்க முன்பே நான் செத்துப் போனாலும் போய்விடுவேன்.

இப்பொழுது உன் வாசிப்பைக் கேட்டு துரும்பாக இளைத்து விட்டேன்! என்றது. நீ சொல்வது சரிதான், நான் வாசிப்பதை என்னாலேயே சகிக்க முடியவில்லை! இருந்தாலும் இதை விட்டால் எனக்கு வேறு வழியில்லை!

சாப்பாட்டுக்கே நான் இதைத்தான் நம்பியிருக்கிறேன். இதை விட்டு விட்டு என்ன செய்வது? என்றார் அவர்.

உனக்கு சாப்பாட்டுக்கு ஏதாவது வழி செய்தால் இந்த வாசிப்பை விட்டு விடுவாயா? என்று கேட்டது அது.

விட்டு விடுவேன்! என்றார் இவர்.

அப்படியானால் நான் சொல்வதைக்கேள்! இந்த ஊர் ராஜாவின் மகளைப் போய் நான் பிடித்துக் கொள்கிறேன். தன் மகளுக்குப் பேய் பிடித்து விட்டது என்று தெரிந்தவுடன் அந்த ராஜா ஊரிலுள்ள மந்திரவாதிகளையெல்லாம் கூப்பிட்டுப் பேய் ஓட்டுவார்! நான் யாருக்கும் அசைந்து கொடுக்காமல் இருந்து விடுகிறேன்.

கொஞ்ச நாள் கழித்து நீ அந்த அரண்மனைக்கு வா. "நான் அரச குமாரிக்கு பிடித்திருக்கும் பைத்தியத்தை சரி செய்கிறேன்" என்று சவால் விடு. அதன் பின்னர் நாதஸ்வரத்தை வாசி. நான் அந்தப் பெண்ணை விட்டு ஓடி விடுகிறேன்.

உடனே ராஜா உனது திறமையைப் பாராட்டி பொன்னும் பொருளும் நிறைய கொடுப்பார். அதை வைத்துக் கொண்டு நீயும் உன் பரம்பரையும் சுகமாகக் காலம் தள்ளலாம்! என்று யோசனை சொன்னார்.

இவரும் யோசித்துப் பார்த்து விட்டு சரியென்று ஒத்துக் கொண்டார்.

இந்தத் திட்டத்தின் படியே எல்லாம் நடந்தது. ராஜா நிறைய பரிசு கொடுத்தார். இவரும் நாதஸ்வரம் வாசிப்பதை விட்டுவிட்டார்.

இந்தக் கதையை எதிரில் உட்கார்ந்திருக்கும் நண்பரிடம் சொன்னேன். அப்படியும் அவர் நாதஸ்வரம் கற்க வேண்டும் என்ற ஆசையை கைவிட்டதாகத் தெரியவில்லை.

சரி.... இவரை எப்படி வழிக்குக் கொண்டு வரலாம் என்று யோசித்துப் பார்த்தேன். கடைசியாக ஒரு விடயத்தைச் சொன்னேன். அதைக் கேட்டபின்னர்தான் நான் நாதஸ்வரம் கற்கும் யோசனையை கை விடுகிறேன்! என்று ஒத்துக் கொண்டார்.

நான் என்ன சொன்னேன் தெரியுமா? நீங்க நாதஸ்வரம் வாசிக்க கற்றுக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தால் நான் உங்களுக்கு உதவியாக தவில் வாசிக்கக் கற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்! என்றேன். அவ்வளவு தான்! ஆள் அம்பேல்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைப்பிரச்சினைக்கு பாக்.-இந்திய பேச்சு மூலமே தீர்வு காண வேண்டும்

## காஷ்மீர் பிரச்சினையில் தலையிட வேண்டும் என்ற பாகிஸ்தான் கோரிக்கையையும் ஏற்க மறுத்தது ஐ.நா

எல்லையில் ஏற்பட்ட பிரச்சினைக்கு இந்தியாவும் பாகிஸ்தானும்பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

காஷ்மீர் பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபைதலையிடவேண்டும் என்ற பாகிஸ்தானின் சமீபத்திய முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.

காஷ்மீர் மாநிலத்தில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டு கோடு மற்றும் சர்வதேச எல்லைப் பகுதிகளில் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ளது. ஆனால் கடந்த சில மாதங்களாக பாகிஸ்தான் வேண்டுமென்றே இந்திய எல்லைக்குள் உள்ள பாதுகாப்பு படைகளின் நிலைகள் மீதும், சிறிய கிராமங்கள் மீதும் கடுமையாக தாக்குதல் நடத்தி வந்தது.

இதையடுத்து பாகிஸ்தான இராணுவத்துக்கு தக்க பதிலடி கொடுக்கும்படி பிரதமர் மோடி உத்தரவிட்டார். இந்தியாவின் கடுமையான தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத பாகிஸ்தான் அதன்பின்பு வேறு வழியின்றி எல்லையில்தாக்குதலை குறைத்துக் கொண்டது.

அதேவேளை பிரச்சினையை திசை திருப்பும் விதமாக, தனது எல்லையோர பகுதிகளை வேண்டுமென்றே இந்தியா தாக்குவதாக அபாண்டமாக புகார் கூறி ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு கடிதம் எழுதியுள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் பிரதமரின் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவு விவகாரங்களுக்கான ஆலோசகர் சர்தாஜ் அஜிஸ், பான் கீ மூனுக்கு கடிதத்தில், இந்தியாவுடன் அண்மைக்காலமாக எல்லையில் பதற்றமான சூழல் நிலவுவதாகவும் இதில் ஐக்கிய நாடுகள் தலையிட்டு காஷ்மீர் விவகாரத்தை சர்வதேச பிரச்சினையாக கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் செய்தி தொடர்பாளர் பார்ஹான் ஹாக்கிடம், காஷ்மீர் விவகாரத்தில் ஐ.நா. தலையிட வேண்டும் என்று பாகிஸ்தான் எழுதிய கடிதம் குறித்து நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதில் அளித்த பர்ஹான் ஹாக் , காஷ்மீர் பிரச்சினையில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகள் குறித்து இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும். அமைதியான மற்றும் நிலையான காஷ்மீருக்காக ஆக்கபூர்வ பேச்சுவார்த்தையில் இரு நாடுகளும் ஈடுபட வேண்டும் என்று தெரிவித்தார். (இ)




# ஹூட்ஹூட் புயலால் 28 பேர் இதுவரை பலி!

## 170 பேர் மாயம்; 6 ஆயிரம் வீடுகள் சேதம்



ஆந்திர மாநிலத்தில் 'ஹூட்ஹூட்' புயல் தாக்குதலுக்கு இது வரை 28 பேர் பலியானதாகவும், 170 பேர் காணாமற் போயுள்ளதாகவும் ஆந்திர அரசு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. விசாகப்பட்டினத்தில் தொடர் மழை காரணமாக சீரமைப்பு பணிகள் தடைப்பட்டுள்ளன.

வங்க கடலில் மையம் கொண்ட 'ஹூட்ஹூட்' புயல் 12 ஆம் திகதி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் அருகே கரையைக் கடந்தது.

மணிக்கு 200 கி.மீ. வேகத்தில் கரையை கடந்த இந்த புயல் கடலோர ஆந்திராவை பெரிதும் பாதித்துள்ளது.

புயலின் பாதிப்பால் விஜயநகரம், விசாகப்பட்டினம், காகுளம் ஆகிய மாவட்டங்களில் நேற்று முன்தினம் பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக சீரமைப்பு பணிகள் தடைப்பட்டுள்ளன.

நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளில் 24 பேரிடர் மீட்பு குழுவினர் ஈடுபட்டுள்ளனர். நேற்று முன்தினம் பெய்த மழைக்கு விஜயநகரம் மாவட்டத்தில் மேலும் 3 பேர் உயிரிழந்தனர். இது வரை 'ஹூட்ஹூட்' புயலுக்கு ஆந்திராவில் விசாகப்பட்டினத்தில் 18 பேர், விஜயநகரம் மாவட்டத்தில் 7 பேர், என மொத்தம் 28 பேர் பலியாகி உள்ளதாக ஆந்திர அரசு அறிவித்தது.

கடலோர ஆந்திர மாநிலத்தில் உள்ள விசாகப்பட்டினம், விஜயநகரம், காகுளம, கிழக்கு, மேற்கு கோதாவரி மாவட்டங்களில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஆந்திர அரசு அதிகாரிகள் முதல்வர் சந்திரபாபு நாயுடுவுக்கு முதல் கட்ட அறிக்கையை வழங்கினர்.

**170 பேர் மாயம்?**

புயல் காரணமாக 170 பேரின் நிலை என்னவானது எனத் தெரிய வில்லை. அவர்கள் கடலில் அடித்துச் செல்லப்பட்டனரா என்பது குறித்து விசாரணை நடைபெறுகிறது. புயல் சீற்றத்தில் இருந்து 146 பேரை வருவாய் அதிகாரிகள் மற்றும் பேரிடர் மீட்பு குழுவினர் காப்பாற்றிஉள்ளனர்.

**பெருத்த சேதம**

புயல் காரணமாக 6 ஆயிரத்து 39 வீடுகள் இடிந்துள்ளன. 5 ஆயிரத்து 216 மின் கம்பங்கள், 600 இற்கும் மேற்பட்ட மின்மாற்றிகள் உடைந்து சேதமடைந்தன. 109 இடங்களில் புகையிரத தண்டவாளங்கள், புகையிரத வீதிகள் பழுதடைந்தன. 1,672 மாடுகள் இறந்தன. சாலையோரம் மற்றும் வீடுகளில் இருந்த 93,000 மரங்கள் உடைந்தும், வேரோடு சாய்ந்தும் விழுந்தன. 609 குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டன. கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 104 படகுகள் சேதமடைந்துள்ளன. (இ)

# அ.தி.மு.கவினரின் போராட்டங்கள் ஜெயாவிற்கு பாதிப்பை ஏற்படுத்தும்

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு

அ.தி.மு.கவினர் மேற்கொண்டு வரும் போராட்டத்தால் சிறையில் இருக்கும் ஜெயலலிதாவுக்கு பாதிப்பை ஏற்படுத்துமே தவிர, அவருக்கு எந்தப் பயனையும் அளிக்காது என்று தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

சிதம்பரத்துக்குச் சென்ற பழ. நெடுமாறன் அங்கு இடம் பெற்ற கட்சி செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்த கொண்ட பின்னர், செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா ஊழல் வழக்கில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் சட்டரீதியாக் முறையிட்டு, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதை விட்டு விட்டு அ.தி.மு.கவினர் வீதிகளில் இறங்கி மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் பேருந்து கண்ணாடிகளை உடைப்பது, கடை அடைப்பு நடத்துவது தவறானதாகும்.

தமிழக அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்கள் பணிகளை கவனிக்காமல் பெங்களூர் சிறை வாசலில் காத்துக் கிடக்கின்றனர். அப்படியிருக்கும் போது அரச அதிகாரிகள் எப்படி செயற்படுவார்கள்.

இதற்கு அ.தி.மு.கவினர் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இல்லையெனில் மக்கள் ஒன்று கூடி முற்றுப்புள்ளி வைப்பார்கள். சட்டம் மற்றும் நீதித்துறை மீது மதிப்பு இருந்தால், அ.தி.மு.கவினர் இச் செயலில் ஈடுபட மாட்டார்கள். இந்த நிலை நீடித்தால், சிறையில் உள்ள ஜெயலலிதாவுக்கு பெரும் கேடு விளைவிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# ஹொங்ஹொங் போராட்டத்தில் திடீரென வெடித்த கடும் மோதல்



(ஹொங்ஹொங்)

ஹொங்ஹொங்கில் முழுமையான ஜனநாயக முறையை நடைமுறைப்படுத்தக்கோரி மாணவர்கள் உட்பட பல் வேறு தரப்பினரும் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஆனால் இதற்கு செவிகொடுக்காத சீனாவும், ஹொங் ஹொங் நிர்வாகமும், இந்த போராட்டம் சட்ட விரோதமானது என அறிவித்து உள்ளன.

எனினும் ஹொங்ஹொங மையப்பகுதியில் உள்ள பல்வேறு சாலைகளில் தடுப்புகளை ஏற்படுத்தி மாணவர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனால் அந்த பகுதிகளில் பரபரப்பு ஏற்பட்டு உள்ளது.

இந்தநிலையில் மாணவர்கள் போராட்டம் நடத்தி வரும் பகுதிகளுக்கு நேற்று முன்தினம் அடையாளம் தெரியாத நூற்றுக்கணக்கானோர் திடீரென திரண்டு வந்தனர். தங்கள் முகத்தை முக மூடியால் மூடி இருந்த அவர்கள், போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினர். பின்னர் அவர்கள் சாலைகளில் ஏற்படுத்தியிருந்த தடுப்புகளை வலுக்கட்டாயமாக அகற்றினர்.

மாணவர்களின் போராட்டத்தால் பாதிக்கப்பட்டிருந்த கார் மற்றும் லொறி சாரதிகளும், போராட்ட எதிர்ப்பாளர்களுக்கு ஆதரவாக களத்தில் இறங்கினர். இதனால் அவர்களிடையே மோதல் ஏற்பட்டது. அங்கே பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்த பொலிஸார் இந்த மோதலை தடுத்து நிறுத்தினர்.

இதேவேளை ஹொங் ஹொங்கில் போராட்டக்காரர்களுக்கு எதிராக, எதிர் போராட்டம் தொடங்கியுள்ளதால் அங்கு பதற்றம் ஏற்பட்டு உள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கட்டுரைப் போட்டி இன்று


யாழ். ஆனைக்கோட்டை (மானிப்பாய்) கிராம நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு பாடசாலை மட்டத்தில் கீழ்ப் பிரிவு, மேற்பிரிவு மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அத்துடன் முன்பள்ளி மாணவர்களுக்கான நிறந்தீட்டல் ,கதை கூறல் ஆகிய போட்டிகள் நூலக சிறுவர் பகுதியில் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களுக்கான பொது அறிவு போட்டி பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கும் இடம்பெறவுள்ளன.




இதேவேளை பிரதி சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மாணவர்கள் சிந்தனை தூண்டும் வீடியோ காட்சியகளும் இடம்பெறவுள்ளன.

மேற்படி பிரதேச பாடசாலை மாணவர்கள் தங்கள் பதிவுகளை உறுதிப்படுத்தி போட்டியில் பங்குபற்றுமாறு நூலகர் அறிவித்துள்ளார். (இ




# வீதியினை புனரமைத்து தருமாறு ஜனாதிபதிக்கு மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வருகை தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நீண்ட காலமாக புனரமைக்கப்படாத வீதியைப் புனரமைத்துத் தருமாறு நேற்று முன்தினம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம், பருத்தித்துறை வீதியிலுள்ள மண்டிசை சிலையடியில் இருந்து கச்சாய் கடற்கரை வரையான பிரதான வீதி நீண்டகாலமாகப் பழுதடைந்த நிலையில் சீரான போக்குவரத்துக்கு தடையான நிலையில் காணப்படுகின்றது.

இவ்வீதியைப் புனரமைத்து தருமாறு பெரும்பாலான பொதுமக்கள் மற்றும் அரசபணியாளர்கள் இணைந்து கோரிக்கை ஒன்றை உரிய அதிகாரிகளுக்கு விடுத்துள்ளனர்.

இருப்பினும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான இவ் வீதியைப்புனரமைத்துத் தருமாறு மக்களால் விடப்பட்ட வேண்டுகோள் இதுவரை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

இதனால் வடக்கிற்கு வருகை தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கொடிகாமத்தில் வாழ்கின்ற 500 இற்கும் மேற்பட்ட பொதுமக்களால் கையொப்பமிடப்பட்ட மகஜர் ஒன்றை நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும் யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் வைத்து ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

அத்துடன் இம்மகஜரின் பிரதி வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியிடமும் கையளிக்கப்பட்டது.

எனவே இம்மக்களால் கையளிக்கப்பட்ட மகஜரின் அடிப்படையில் இவ்வீதி புனரமைக்கப்பட்டு அரசபணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இலகுவான முறையில் போக்குவரத்தில் ஈடுபட உதவுமாறு வீதியைப் பயன்படுத்துவோரினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-254)

## முன்பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள் 20ஆம் திகதி யாழில்

யாழ்.கொக்குவில் பொது நூலகத்தின் வாசிப்பு மாத நிகழ்வுகளில் முன்பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொக்குவில் பொது நூலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இப் போட்டிகளில் ஒரு முன்பள்ளியில் இருந்து 5 மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ள முடியும் எனவும் ஒருவர் 3 போட்டிகளில் மட்டும் பங்குபற்ற முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


போட்டிகளின் விபரங்கள்

- வினோத உடைப்போட்டி (திருவள்ளுவர், ஔவையார், பாரதியார் ,ஆறுமுகநாவலர் ஆகிய பெரியார்களில் விரும்பிய பாத்திரம்)
- தேவாரம்(விரும்பியது)
- பாட்டு (விரும்பியது)
- பேச்சு (எனது அம்மா, எனது செல்லப்பிராணி ,எனது பாடசாலை)
- கதை சொல்லுதல்(விரும்பிய கதை)

ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 0779035439 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு நூலகர் அறிவித்துள்ளார். (இ







யாழ். வருகை தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யா/ இந்து மகளிர் கல்லூரியில் மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்தார். இந் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ .சந்திரசிறி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர். மகிந்தோதய ஆய்வு கூடத்தை திறந்து வைத்த பின்னர் ஜனாதிபதி பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் குழுப்படம் எடுத்துக் கொண்டார்.

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் பஞ்சரத்தினம் மயூரன் யாழ். மாவட்ட சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ்.மாவட்ட நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ். இந்து கல்லூரி பழைய மாணவரான இவர் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றி வருகிறார். அத்துடன் யாழ். மொழிச் சங்கத்தின் செயலாளராகவும் சமூகப்பணியாற்றி வருகிறார். (இ

# சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் யாழில்

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு வடபகுதி லயன்ஸ் கழகங்களும் யாழ்ப்பாணத்திலுள்ள விழிப்புலனற்றோர் அமைப்புக்களும் இணைந்து வெளளைப் பிரம்பு தினத்தை அனுஷ்டிக்கவுள்ளன.

வெள்ளைப் பிரம்பு தொடர்பாகவும் விழிப்புலனற்றோர் தொடர்பாகவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு இந் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் அங்கமாக எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சுன்னாகம் பேருந்து தரிப்பு நிலையத்தில் விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமாகி, யாழ்.இராமநாதன் கலலூரியைச் சென்றடைந்து அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும்.

லயன் செ.மகாதேவா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா, சிறப்பு விருந்தினர்களாக லயன் டாக்டர் கே.எம். பத்மநாதன், வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளர் தி.பிரகாஷ் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வாழ்வகம் விழிப்புலனற்றோர் இல்லத்தின் தலைவரும் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளருமாகிய ஆர்.இரவீந்திரன், வலி.தெற்கு பிரதேச சமூகசேவை உத்தியோகத்தர் வி.கே.முருகையா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன் போது விழிப்புலனற்ற சிறார்களின் நடன நிகழ்வுகள், பட்டிமன்றம், இன்னிசை நிகழ்வு என்பனவும் நடைபெறவுள்ளன. லயன்ஸ் கழகங்களின் சேவைத்திட்டமும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி போட்டிகளும் பரிசளிப்பு நிகழ்வும்

(கிளிநொச்சி)

கிளி/முருகானந்தா கல்லூரியில்தேசியவாசிப்புமாதத்தை முன்னிட்டு பல்வேறு செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றன.

நூலகஅபிவிருத்திகுழுவும் வாசிப்பு மாதத் குழுவும் இணைந்து நூலகத்தின் வசதிகளை மேம்படுத்தல், மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை தூண்டுதல், நூலகத்தின் பயன்பாட்டின் முக்கியத்துவத்தை சமூகத்தவர்களுக்கும் மாணவர்களுக்கும் தெரியப்படுத்தல், நூல்களின் எண்ணிக்கைகளை அதிகரித்தல், போன்றவற்றை முன்னெடுத்து வருகின்றனர்.




இச்செயற்பாடுகள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை பாடசாலை மட்டத்தில் நடத்தப் படவுள்ளது.

இதன்பிரகாரம் இன்று புதன் கிழமை வாசிப்பின் மேம்பாடு, கற்றலுக்கான துணை வளம் நூலகம் எனும் தலைப்பில் கட்டுரை, வாசிப்பு, விவாதப் போட்டி என்பன கல்லூரியில் நடைபெறும்.

அதேபோல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வாசிப்போம், கௌரவிப்போம் எனும் தலைப்பில் போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

அத்துடன் நேற்று முன்தினம் கல்லூரி அதிபர் பி.வரதன் தலைமையில் வாசிப்பு மாதத்திற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-277)

# வட மாகாணத்தில் சேவையாற்ற வைத்தியர்கள் முன்வர வேண்டும்

## வடமாகாணசபை உறுப்பினர் சிவமோகன் கோரிக்கை



(குருமன்காடு)

எமது இளைய வைத்திய சமுதாயம் வடமாகாணத்தில் வேலை செய்ய விரும்பி முன் வரவேண்டும் என பெரியகுளம் கனகராயன் குளத்தில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமின் பொது வடமாகாணசபை உறுப்பினரும் சுகாதார அமைச்சின் ஆலோசனைக்குழு உறுப்பினருமான வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்தார்

அவர் தொடர்ந்து கூறுகையில,

எமது வடமாகாண மருத்துவ பீட மாணவர்கள தங்களது உள்ளக பயிற்சிகளை முடித்தபின்தென்பகுதிவைத்திய சாலைகளை தெரிவு செய்வதனால் எமது பிரதேசத்தில் சிங்கள மொழி பேசும் வைத்தியர்கள் பெருந் தொகையாய் பணிக்கமர்த்தப்படுகின்ற னர.

எமது மக்கள் சிங்கள மொழியறிவு இல்லாததனால் பெரும் துயர்களை சந்திக்கின்றனர். மேலும், பெரும்பாலான சிங்கள மொழி பேசும் வைத்தியர்கள் சேவை மனப்பாங்கு அற்று செயற்படுவதாகவும் வடபகுதி பொதுமக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். இதற்கு தீர்வாகஎமதுஇளையவைத்திய சமுதாயம் எமது மக்களுக்காக சேவை செய்ய முன்வர வேண்டும்எனவும்தெரிவித்தார.

மேற்படி மருத்துவ முகாமில் 150இற்கும் மேற்பட்ட நோயாளிகள் பங்குபற்றி பயனடைந்தனர்.

இம்மருத்துவ முகாமில் விசேட வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி. நாகேந்திரா வைத்திய கலாநிதி. எஸ். சுகந்தன் (கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை), வைத்திய கலாநிதி. விஷ்ணு சிவபாதம் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகிய யாழ. மருத்துவ சங்க வைத்திய கலாநிதிகள் பங்குபற்றினர்.(2-250)

# நியமனம் பெற்ற கிராம அலுவலர்களுக்கான பயிற்சி நெறி இன்று

(கிளிநொச்சி)

புதிதாக நியமனம் பெற்ற கிராம அலுவலர்களுக்கான பயிற்சிநெறி இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கிராம அலுவலர்களான என்.காண்டீபன் (புலோப்பளை கிழக்கு, பளை) பி.நாகபூஷணி (வண்ணான் கேணி, பளை) ரி.கலைரூபன் (தட்டுவன்கொட்டி, ஆனையிறவு), எஸ்.சர்மிளா (இல.107, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி ஜி.விஜிதா (இல.127 இரத்தினபுரம், கிளிநொச்சி), ஜி.கஸ்தூரி (இல.712, சிவிக்சென்ரர், வட்டக்கச்சி), ஏ.சுஜிதா (இல. 709, சிவிக்சென்ரர் வட்டக்கச்சி), எஸ்.யதுகுலன் (இல.99 கட்சன் வீதி, வட்டக்கச்சி) எஸ். விஜிதா (இல.118, விவேகாணந்த நகர் மேற்கு கிளிநொச்சி), எஸ்.ரஞ்சினி (இல.347/1, ஜெயந்திநகர், கிளிநொச்சி) ஆகியோரை சமுகம் தருமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# போதைப்பொருள் பாவனை வடமாகாணத்தில் அதிகரிப்பு

## வவுனியாமாவட்ட மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

வடபகுதியில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக வவுனியா மாவட்ட மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரி பி.இரகுநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இவ் வருடத்தின் ஜனவரி மாதத்தில் இருந்து செப்டெம்பர் மாதம் வரையிலான 9 மாத காலப்பகுதியில் கஞ்சா ஹெரோயின் வைத்திருத்தல், கள்ளச்சாராயம், கசிப்பு உற்பத்தி, சட்டவிரோத மது விற்பனை, வயது குறைந்தவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை என்பவற்றுடன் தொடர்புடைய 139 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நீதி மன்றம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதில் ஜூலை ஓகஸ்ட், செப்டெம்பர் ஆகிய மூன்று மாதங்களிலும் மாத்திரம் கஞ்சா வைத்திருந்த 24 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து மூன்று கிலோ 35 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இதே காலப்பகுதியில் ஹெரோயின் வைத்திருந்த 10 பேர் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து ஆயிரத்து 65 மில்லி கிராம் ஹெரோயின்மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புக்களின் போதே இவை மீட்கப்பட்டன.

குறிப்பாக கேரளா கஞ்சா மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கு கொண்டு வரப்பட்டு அங்கிருந்து ஏனைய இடங்களுக்கு கடத்தப்படுகிறது.

சுற்றிவளைப்புக்களில் அதிகமாக கிளிநொச்சி , மன்னார் ஆகிய பகுதிகளிலேயே போதைப்பொருள் பயன்பாடு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (2-250)

# மின் விநியோகம் வழங்குவதற்கான வேலைகள் முன்னெடுக்கப்படவில்லை

கண்டாவளை பிரதேச செயலக பிரிவிலுள்ள குஞ்சுப் பரந்தன் பெரிய பரந்தன் கிராமத்தில் வசிக்கும் குடும்பங்களுக்கு இதுவரை மின்சார விநியோகம் வழங்கப்படவில்லை யென பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். குறித்த கிராமத்தில் தற்போது 52 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்துவருகின்றன.

இவர்களுக்கான மின்சாரம் வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை மின்விநியோகம் வழங்குவதற்கு ஆயத்த வேலை கள் முன்னெடுக்கப்படவில்லை யென அக்கிராம மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

### பாதிக்கப்பட்ட மக்கள் கவலை

அநேகமாகநகரத்தைஅண்மித்த இடங்கள் கவனிக்கப்படுவதும் கிராமப்புறங்களை அண்மித்த இடங்களுக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளோ மின்சார வசதிகளோ ஏற்படுத்திக்கொடுக்கப்படுவதில்லை யெனவும் இதற்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரிகள் கூட கவனம் செலுத்தாமல் இருப்பதும் வேதனை அளிப்பதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

எனவே மின்சாரத்தின் தேவையைக்கருத்தில்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள்கூடிய விரைவில் மின்சார வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள்கோரிக்கை விடுக்கின்றனர். (2-254)

# மீண்டும் ஒளிரும் மின்விளக்குகள்

கிளிநொச்சி நகர் பகுதியில் ஏ 9 வீதியில் அமைக்கப் பட்டிருந்த மின்விளக்குகள் மீண்டும் நேற்று முன்தினம் இரவு முதல் ஒளிர ஆரம்பித்துள்ளன.

கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து கரடிப்போக்கு சந்தி வரையிலுள்ள 2.5 கிலோ மீற்றர் நீளமான வீதிக்கு, வீதி அபிவிருத்தி அதிகார சபையால் கடந்த 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு ஒளிரவிடப்பட்டன.

இந்த மின்விளக்குகளுக்கான கட்டணத்தை கரைச்சி பிரதேச சபை கட்டவேண்டும் ,என வீதி அபிவிருத்தி அதிகார சபை கோரியிருந்தது. எனினும், மின்கட்டணத்தை செலுத்துவதற்குரிய போதுமான வருமானம் பிரதேச சபையிடம் இல்லையென கூறி பிரதேச சபை மின் கட்டணத்தை செலுத்தவில்லை.

மின்விளக்குகளிற்காக, 12 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் வரையில் மின்கட்டண நிலுவை காணப்பட்டதால் இலங்கை மின்சார சபை கடந்த வருடம் செப்டெம்பர் 3ஆம் திகதி முதல் மின்விளக்குகளுக்கான மின் விநியோகத்தை நிறுத்தியது.

இந்நிலையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாகாண ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கிளிநொச்சி மின்விளக்குகளை மீண்டும் ஒளிர வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி மின்வலு மற்றும் மின்சக்தி அமைச்சருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டார்.

அதாவது, சூரிய மின்கலத்திலான மின்விளக்குகளை பொருத்துமாறு ஜனாதிபதி இதன்போது பணிப்புரை விடுத்தார். (2)



• சிறுவர் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட சர்வோதயத்தின் ஏற்பாட்டில் சிறுவர் தினம் மதுரா நகரில் அண்மையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் சிறுவர்கள் பங்கேற்று நடித்த நாடகத்தினை படத்தில் காணலாம். (படம்:குருமன்காடு செய்தியாளர்)

# மூத்த ஓய்வூதியர்கள் நன்மதிப்பு நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அரச சேவை மூத்த ஓய்வூதியர்கள் நன்மதிப்பு நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி கனகபுரம் 4 ஆம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள நண்பர்கள் விடுதியில் ஓய்வூதிய நலன்புரிச் சங்கத்தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்குபிரதமவிருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சிமாவட்ட செயலக திட்டப்பணிப்பாளர் ச.மோகனபவன், கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ஜெ.கில்பேட் குணம், கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி ஜெ. ஜெயராணி தமமோதயன், பூநகரி பிரதேச செயலர் சி.சத்தியசீலன், கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற அரச அதிபர் தி.இராசநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்விழாவிற்கு வருகை தருபவர்களின் வசதிக்காக எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இருந்து நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு பேருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிறது. (2-254)

# வியாபார உரிமத்தை விரைவில் தந்துதவுங்கள்

## வர்த்தகர்கள் தெரிவிப்பு

(கண்டாவளை)

கரைச்சிபிரதேசசபையின் கண்டாவளை உப-பணிமனைக்குட்பட்ட பகுதிகளில்காணப்படும் வர்த்தக நிலையங்களுக்கான 2014ஆம் ஆண்டுக்குரிய வியாபார உரிமம் இது வரை வழங்கப்படவில்லை யென வர்த்தகர்களால் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதி வர்த்தகர்களால் 2014 ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இவ் வருடத்தின் ஆரம்பப் பகுதியில் ஆவணங்கள் மற்றும் பணம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டபோதும் இதுவரை வியாபார உரிமம் வழங்கப்படவில்லையென வர்த்தகர்களால் தெரிவிக்கப் படுகிறது.

அத்துடன் சுகாதார நடவடிக்கைகளுக்காக வருகை தரும் அதிகாரிகளுக்கு பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டை மட்டும் காண்பிப்பதாக அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவ்வருடம் முடிவுறும் நிலையை அண்மித்துள்ளதால் காலம் தாழ்த்தாது விரைந்து வழங்குமாறு வர்த்தகர்களால் கோரிக்கை விடுக்கப் படுகிறது. (2-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத்தக்க அல்ல செய்யக்கெடும்; செய்யத்தக்க
செய்யாமை யானுங் கெடும்.
- திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழ்நாட்டுச்சிறைக்கு ஜெயாவை மாற்றலாம்

## கர்நாடக அரசு அறிவிப்பு

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவை தமிழ்நாடு சிறைக்கு மாற்ற கர்நாடக அரசுக்கு ஆட்சேபனை இல்லை என்று அம் மாநில உள்துறை அமைச்சர் கே.ஜே.ஜார்ஜ் தெரிவித்துள்ளார்.

சொத்துக்குவிப்பு வழக்கில் சிறை தண்டனை பெற்றுள்ள ஜெயலலிதா பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் சிறைக்கு சென்று இன்றுடன் 19 நாட்கள் ஆகின்றன.

கர்நாடக உயர்நீதிமன்றத்தில் அவரது பிணை மனு தள்ளுபடி செய்யப்பட்டதை அடுத்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. அவரது மனு எதிர்வரும் 17ஆம் திகதிக்கு விசாரணைக்கு வருகின்ற நிலையில் ஜெயலலிதாவை தமிழ்நாடு சிறைக்கு மாற்றுவதில் கர்நாடக அரசுக்கு ஆட்சேபனை இல்லை.

ஆனால் தமிழ்நாட்டின் சிறைத்துறை முறைப்படி கடிதம் வழங்க வேண்டும். உச்சநீதிமன்ற அனுமதி தேவை. இதற்கான உரிய அனுமதியையும் பெற வேண்டும். இந்த வழக்கு உச்சநீதிமன்ற உத்தரவுப்படி கர்நாடகத்தில் நடைபெற்றது.

அதனால் உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு அனுமதி பெற வேண்டும். இந்த விடயத்தில் நாங்கள் தன்னிச்சையாக எந்த முடிவும் எடுக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஜெயலலிதாவின் பிணை மனு வரும் வெள்ளிக்கிழமை உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது. இந்த நேரத்தில் சிறை மாற்றம் குறித்த கோரிக்கை அதனை பாதிக்க வாய்ப்பிருக்கிறது.

எனவே பிணை மனு மீதான முடிவு வந்தவுடன் அவரை தமிழக சிறைக்கு மாற்றலாம் என தமிழக அரசு முடிவு செய்துள்ளது. (இ)

# இரணைமடுக்குள விவகாரம் ஜனாதிபதியின் இராஜதந்திரம்

கொக்கிளாயில் நடந்த கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டார். அந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு பொறியியல்பீடம் தேவை என்றும் கிளிநொச்சி அறிவியல் நகரத்தை அதற்குப் பயன்படுத்த முடியும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா கூற, அதனை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி அந்தக் கூட்டத்தில் வைத்தே பொறியியல்பீடம் அமைப்பதற்கான அனுமதியை விடுத்தார்.

கூடவே அறிவியல் நகரமும் விடுதலைப் புலிகள் அங்கு கட்டி வைத்த கட்டடங்களும் யாழ்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமாயின. கொக்கிளாயில் அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தா கையாண்ட இராஜதந்திரம் வெற்றி கண்டது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் வட மாகாணத்திற்கான அபிவிருத்திக் குழுக்கூட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

இதன்போதும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒரு இராஜதந்திரத்தைக் கையாண்டார். அதாவது இரணைமடுக் குளத்து நீரை யாழ்.குடா நாட்டிற்குள் கொண்டு வருவதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தடையாக இருக்கிறது. எனவே, குடாநாட்டு மக்களின் நன்மை கருதி இரணைமடுக் குளத்து நீரை குடாநாட்டுக் கொண்டு வரும் திட்டத்தை அமுல்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்படியான ஒரு கோரிக்கையை விடுவார் என்பதை முன்கூட்டியே அறிந்து வைத்திருந்த ஜனாதிபதி, இரணைமடுக் குளத்து விவகாரத்தில் தான் தலையிட விரும்பவில்லை என்றும் அது வடக்கு மாகாணசபைக்குரிய அதிகாரம் என்றும் கூறினார்.

இங்குதான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கையாண்ட இராஜதந்திரத்தை ஜனாதிபதி தனக்குச் சாதகமாக்கிக் கொண்டதைக் காண முடியும்.

அதாவது வடக்கு மாகாணசபையின் அதிகாரத்தில் நான் தலையிடுவதில்லை என்றும் எனவே, இரணைமடுக் குளத்து விவகாரத்தை வடக்கு மாகாண அரசே பார்த்துக் கொள்ள வேண்டும் என்றவாறும் அவரின் பதில் அமைந்திருந்தது.

வடக்கு மாகாண அரசுக்கு வழங்க வேண்டிய அதிகாரங்கள் இன்னமும் வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்களின் மத்தியில், இரணைமடுக் குள விவகாரத்தில் மட்டும் ஜனாதிபதி ஒரு கனவானாக நடந்து கொண்டார். இவ்வாறாக தன்னை தலையிடாக் கொள்கை உடைய ஒரு தலைவராக ஜனாதிபதி மகிந்த காட்டிக் கொண்டமை,

தமிழர்கள் தங்களுக்குள் முரண்பட்டுக் கொள்வதற்கு இரணைமடுக் குள விவகாரம் நல்ல விடயம். எனவே, தமிழர்கள் தங்களுக்குள் முரண்படவும் பிரதேசவாதம் என்று கூறி ஒற்றுமையீனப்படவும் கூடிய இரணைமடுக் குள விவகாரத்தில் தான் தலையிட்டு அதனைச் செம்மைப் படுத்துவதென்பது தனக்குச் சாதகமானதல்ல என்று அவர் முடிவு செய்திருக்கலாம். அல்லது இத்தகைய ஒரு முடிவை தென்பகுதிப் புத்திஜீவிகள் ஜனாதிபதிக்கு முன்கூட்டியே எடுத்துரைத்திருக்கலாம்.

ஆக, தமிழர்கள் தமிழர்களுக்காகச் செய்யக் கூடிய ஒரு நல்ல விடயத்தை அவர்கள் செய்யாமல் விடும் போது அதில் தலையிடாமல் இருப்பதே புத்திசாலித்தனம் என்பதில் தென்பகுதி ஆளும் வர்க்கம் தெளிவாக இருக்கிறது என்பதை; இரணைமடுக்குள விவகாரம் குறித்த ஜனாதிபதியின் பதில் நமக்கு வெளிப்படுத்துகிறது.

என்ன செய்வது! குடிநீர்ப் பிரச்சினை பூதாகரமாக வரப்போகின்ற நிலையில், நாங்கள் செய்ய வேண்டியதை செய்யாமல் விட்டால் அதுவே எங்கள் இனத்திற்கு பலவீனமாகிப் போகும் என்பதற்கு இரணைமடுக் குளமும் நல்ல எடுத்துக்காட்டு.

# ஜே.ஆர்.போட்ட முடிச்சினை யாரும் அவிழ்க்க முடியாது

## மஹாநாயக்க தேரர்கள் சுட்டிக்காட்டு

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன போட்ட முடிச்சானது யாராலும் அவிழ்க்க முடியாத வகையில் போட்டப்பட்டுள்ள முடிச்சாகும் என்று உடகம ஸ்ரீபுத்தரக்பித்த மற்றும் அஸ்கிரிய மஹாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் உப- தலைவருமான ரவி கருணாநாயக்க தலைமையிலான குழுவினர், மஹாநாயக்கர்களை நேற்று முன்தினம் திங் கட்கிழமை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டனர்.

இதன்போதே மஹாநாயக்கர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் உள்ள தேவையற்றவற்றை நீக்கவேண்டும்.

இந்த முறைமையை அவரவர்கள் தங்களுடைய தனிப்பட்ட நலன் கருதியே பயன்படுத்தியுள்ளனர்.

இதனூடாக நாட்டுக்கு ஏற்படவிருக்கும் அழிவு குறித்து அவர்கள் சிந்திக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் பிரதமர் பதவி 1948ஆம் ஆண்டில் இலங்கை ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை அடைந்தபோது உருவாக்கப்பட்டது.

பிரித்தானியாவின் வெஸ்ட்மினிஸ்டர் அமைப்பைப் போன்ற அரசியலமைப்பு இலங்கையிலும் நடைமுறையில் இருந்தது. அதனால் இலங்கையிலும் பிரதமரே நாட்டின் அதியுயர் தலைமைப் பதவியைக் கொண்டிருந்தார்.இலங்கை 1972இல் குடியரசான போதும் பிரதம மந்திரியே நாட்டின் தலைவராக இருந்தார். ஆனால், இவ்வமைப்பு 1978இல் மாற்றப்பட்டது.

1978 ஆம் ஆண்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி (அரசுத்தலைவர்) அரசியலமைப்பு மாற்றத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. இதன்படி ஜனாதிபதி நாட்டின் தலைவராகவும் அரசின் தலைவராகவும் இருக்க வழிகோலப்பட்டது.

பிரதமர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார். ஜனாதிபதி இறக்கும் போது பிரதமர் தற்காலிக ஜனாதிபதியாவார். நாடாளுமன்றம் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் வரையில் அல்லது புதிய ஜனாதிபதி தேர்தல் நடக்கும் வரையில் தற்காலிக ஜனாதிபதி பதவியில் இருக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# தமிழ்ப்பெண் தற்கொலை

## உறுதிப்படுத்தியது பிரேத பரிசோதனை அறிக்கை

பிரித்தானியாவில் ஹரோ நகரத்தை சேர்ந்த தமிழ் பெண் தனது குழந்தைகள் இருவரை கொலை செய்து விட்டு, தற்கொலை செய்து கொண்ட வழக்கில் பிரேத பரிசோதனை அறிக்கை வெளிவந்துள்ளது. அதன்படி, குழந்தைகள் தாயினால் மூச்சுத் திணற கொலை செய்யப்பட்டுள்ளதும் பின்னர் தாய் தற்கொலை செய்து கொண்டதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அனோபன் - வயது 5, நதிபன் - வயது 8 மாதம் ஆகிய இரு ஆண் பிள்ளைகளையும் கொன்று விட்டு, மனைவி ஜயவாணி தற்கொலை செய்து இருக்கின்றமையை கணவன் சக்திவேல் விக்னேஸ்வரன் - வயது 36 வீட்டுக்கு வந்தபோது கண்டு கொண்டார்.

கறுப்பு பைகளுக்குள் பிள்ளைகளின் சடலங்கள் போடப்பட்டு இருந்தன. மனைவியும் இறந்து காணப்பட்டார். வேலையில் இருந்து திரும்பி வந்த கணவன் இதைகண்டு பேரதிர்ச்சி அடைந்தார்.

இம்மரணங்களில் வேறு எவர் மீதும பொலிஸாருக்கு சந்தேகம் இல்லை. குழந்தையின் பிறப்புக்கு பின்னரான மன அழுத்தத்தால் ஜயவாணி பாதிக்கப்பட்டு இருக்கக் கூடும் என்று பொலிஸார் சந்தேகித்தனர்.

கழுத்து இறுக்கப்பட்டமையே ஜெயவாணியின் மரணத்துக்கான காரணம் என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது.(இ)

# சீனாவிற்கு மாணிக்கக்கற்களை கடத்த முயன்றவர் கைதாகினார்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து சீனாவிற்கு சட்ட விரோதமான முறையில் மாணிக்கக்கற்களை கடத்த முயற்சித்த நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரிடமிருந்து 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான மாணிக்கக்கற்களை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 25 ஆயிரம் ரூபாய் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன்,சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# பராசக்தி வித்தியாலயத்தின் பரிசில் தின விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யா/ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் பரிசில் தின விழா இன்று புதன்கிழமை முற்பகல்10 மணிக்கு மேற்படி வித்தியாலய கலையரங்கில் பாடசாலை அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோன்குயின்ரஸ் கலந்து கொள்ளவுள்ளார். (இ)

# வெள்ளைப்பிரம்பு தினம்

உள்ளதில் உயர்ந்த உறுப்பு
கொள்ளை போனதால்
கையில் வெள்ளைப் பிரம்போடும்
நெஞ்சில் நிறைந்த நம்பிக்கையோடும்
போகிறவரோடு கைகோர்ப்பீர்
துவளடிக்கும் சொல்லன்று
தூக்கிவிடும் கைபோதும்
[illegible] சமூகம் இதுவே!

சு.சிவாரசா
நாவற்குழி

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## நம்பிக்கை வேண்டும்



✦ கடவுளிடம் நம்பிக்கை இல்லாததே துன்பத்திற்கெல்லாம் அடிப்படைக் காரணம்.

✦ எண்ணத்திற்கும், பேச்சிற்கும் ஒற்றுமை இருந்துவிட்டால் போதும். வேறு எந்தச் சாதனையும் தேவையில்லை.

✦ உடலைப் பெற்று விட்ட உயிர்கள் அனைத்திற்கும் இன்பம், துன்பம் வந்தே தீரும்.

✦ முற்பிறவியில் செய்த நல்வினை, தீவினைக்கேற்ப இந்த பிறவியில் வாழ்வின் போக்கு அமைகிறது.

✦ பக்தியுடன் கடவுளின் திருநாமத்தைச் சொல்லுங்கள். எல்லாப் பாவங்களில் இருந்தும் விடுதலை கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின் அணியை சரிய வைத்த வடகிழக்கு யுனைடெட் அணி

இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து போட்டித்தொடரின் இரண்டாவது போட்டியில் வடகிழக்கு யுனைடெட் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

போட்டித்தொடரின் இரண்டாவது போட்டி கவுகாத்தி இந்திரா காந்தி ஸ்டேடியத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்தது.

இதில் இந்தி நடிகர் ஜான் ஆப்ரகாமை உரிமையாளராக உள்ளடகிய வடகிழக்கு யுனைடெட் (கவுகாத்தி) அணியும், சச்சின் டெண்டுல்கரை உரிமையாளராக கொண்ட கேரளா பிளாஸ்டர்ஸ் (கொச்சி) அணியும் மோதின.

இதன் தொடக்கத்தில் கேரளா பிளாஸ்டர்ஸ் அணி வீரர்கள், கவுகாத்தி அணியின் கோல் எல்லையை முற்றுகையிட்டு தாக்குதல் ஆட்டத்தை தொடுத்தனர்.



இதனை கவுகாத்தி அணியின் தடுப்பு ஆட்டக்காரர்கள் சிறப்பாக செயற்பட்டு தடுத்தனர்.

16வது நிமிடத்தில் கேரளா பிளாஸ்டர்ஸ் அணி வீரர் இன் ஹுமெ கோல் அடித்ததை நடுவர்கள் ஆப்-சைடு என்று அறிவித்தனர்.

கேரளா பிளாஸ்டர்ஸ் வீரர் ஷபிக் அடித்த கோல் முயற்சியும் வீணானது. முதல் பாதியின் கடைசி நிமிடத்தில் (45 ஆவது நிமிடம்) கவுகாத்தி அணி கோல் அடித்தது.

அந்த அணி வீரர் டேவிட் நிகெய்ட் கடத்தி கொடுத்த பந்தை பெனால்டி பாக்ஸ் கார்னரில் நின்ற ஜெர்ஜியோ கோக் தாழ்வாக கோலை நோக்கி அடித்தார்.

அது கேரளா பிளாஸ்டர்ஸ் கோல கீப்பர் டேவிட் ஜேம்சை ஏமாற்றி கோலுக்குள் புகுந்தது. பின் பாதியில இரு அணியினரும் கோல் அடிக்க எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை.

முடிவில் வடகிழக்கு யுனைடெட் அணி 1-0 என்ற கோல் கணக்கில் கேரளா பிளாஸ்டர்சை வெற்றி கொண்டது. (க)

## கூடைப்பந்தாட்ட போட்டி-2014

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினால் வருடா வருடம் நடத்தப்படுகின்ற அமரர் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியானது இவ்வருடமும் வடமாகாண ரீதியில் நடத்தப்படவுள்ளது.

அந்த வகையில் 15.10.2014 இன்று போட்டிகள் ஆரம்பமாகி 30.10.2014 அன்று இறுதிப் போட்டிகளுடன் நிறைவுபெறவுள்ளது.

பிற்பகல் நான்கு மணிக்கு ஆரம்பமாகும் இன்றைய போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது.

## மென்பந்து போட்டி முடிவுகள்

முல்லைத்தீவு விசுவமடு மகாவித் தியாலயத்தின் ஏற்பாட்டில் தோழர்கள் விளையாட்டு கழகத்தின் 21 ஆவது ஆண்டை முன்னிட்டு கிளி/, முல்லை. மாவட்டங்களுக்கு நடத்தப்படும் மாபெரும் மென்பந்து சுற்றுப் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டம் விசுவமடு மகாவித்தியாலயத்தின் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

**முதல் போட்டியில்:-**

விசுவமடு தோழர்கள் A அணியை எதிர்த்து விசுவமடு செந்தாமரை B அணி மோதியது.

இதில் விசுவமடு தோழர்கள் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

**இரண்டாவது போட்டியில்:-**

தர்மபுரம் இளந்தாமரை அணியும் கிளி நொச்சிஇளந்தென்றல் A அணியும் மோதியது இதில் கிளி நொச்சி இளந்தென்றல் A அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன் னேறியது.

**மூன்றாவது போட்டியில்:-**

விசுவமடு செந்தாமரை A அணியும் கிளிநொச்சி இளந்தென்றல் A அணியும் மோதியது.

இதில் கிளிநொச்சி இளந் தென்றல் B அணியினர் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

**நான்காவது போட்டியில்:-**

விசு வமடு தோழர்கள் B அணியும் கிளி நொச்சி இளந்தென்றல் B அணியும் மோதியது. இதில் கிளி நொச்சி இளந்தென்றல் B அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

**ஐந்தாவது போட்டியில்:-**

விசுவமடு புதிய சூரியன் அணியும் முரசு மோட்டை முரசு ஒளி அணியும் மோதியது.

இதில் விசுவமடு புதிய சூரியன் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

அடுத்த போட்டிகள் எதிர்வரும் சனி ,ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது. (க)

## ஆசிரியர் தினத்தினை முன்னிட்டு யாழ்.இந்துவில் உதைபந்தாட்டம்

ஆசிரியர் தின்த்தை முன்னிட்டு யாழ். இந்துவில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டி சமநிலையில் நிறைவுற்றது. ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ். இந்துக் கல்லூரியில் வருடாந்தம் இடம்பெறும் ஆசிரியர்களுக்கும் மாணவ முதல்வர்களுக்குமிடையி லான உதைபந்தாட்டப் போட்டி சம நிலையில் நிறைவுபெற்றது. இப்போட்டி கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

போட்டி ஆரம்பித்து சில நிமிடத்தில் தமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை ஆசிரியர் அணி சாதகமாக்கியது.

அணியின் சவேரியன் குரூஸ் அணிக்கான முதல் கோலைப் போட்டு முன்னிலைப்படுத்தினார்.

எனினும் சுதாகரித்து ஆடிய மாணவ முதல்வர் அணியும் சிறிது நேரத்தில் கோலைப் போட்டது.

அணி சார்பில் எஸ்.விஜிந்தன் முதலாவது கோலைப் போட்டு போட்டியை சமநிலைப்படுத்தினார்.

முதல் பாதியாட்டம் 1:1 என சமநிலையில் முடிவடைந்தாலும் இரண்டாவது பாதியாட்டம் ஆரம்பித்து சிறிது நேரத்தில் மாணவ



முதல்வர் அணி மேலுமொரு கோலைப் போட்டது.

இவ் இரண்டாவது கோலையும் அணி சார்பில் எஸ்.விஜிந்தன் போட்டு அணியை முன்னிலைப் படுத்தினார்.

எனினும் போட்டி முடிவதற்கு சில நிமிடங்கள் இருக்கையில் ஆசிரியர் அணியைச் சேர்ந்த திருமாறன் கோலொன்றைப் போட போட்டி 2:2 என சமநிலையில் நிறைவுற்றது. (க-23)



உரும்பிராய் இலக்குமி விளையாட்டுக்கழகம் நடத்திய ரஞ்சித் ஞாபகார்த்த 7 பேர் கொண்ட மா பெரும் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் சூறாவத்தை நியூவோறியர்ஸ் விளையாட்டுக் கழகம் தொடர்ச்சியாக இரண்டா வது தடவையும் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றிக் கொண்டது. வெற்றி பெற்ற அவ்வணியினரை படத்தில் காணலாம்.

## மெய்வல்லுநர் போட்டி; அருணோதய வீரர் சாதனை

கடந்த 13,14 ஆம் திகதிகளில் தியகம மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்ற 84 ஆவது Sir John Tarbat சிரேஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் யா/அருணோதயக்கல்லூரி மாணவன் செல்வன் க.நப்தலி யொய்சன் புதிய சாதனை நிலை நாட்டினார். இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் சங்கத்தினால் நடத்தப்படும் இப்போட்டியில் ஆண்களுக்கான 18 வயதுக்குட்பட்ட கோலூன்றிப்பாய்தலில் 4.20m உயரம் பாய்ந்த யா/அருணோதயக் கல்லூரி வீரர் க.நப்தலி யொய்சன் புதிய சாதனையை



நிலைநாட்டினார். அதற்கு முன்னர் 2012இல இதே பாடசாலையைச் சேர்ந்த பா.லவணனின் 3.77m என்ற சாதனையை முறியடித்தே இச் சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

இவர் இவ் வருடம் நடைபெற்ற கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் 3.96m பாய்ந்து சாதனை நிலைநாட்டியமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் 17 வயதுப்பிரிவில் 3.90m பாய்ந்து தங்கப்பதக்கத்தையும் பெற்றார். (க)

## தீபாவளியை முன்னிட்டு கபடிச் சுற்றுப்போட்டி

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு துறை அமைச்சும் மாவட்ட தாச்சி சங்கமும் இணைந்து மாகாண மட்ட கபடிப் போட்டிகளை நடத்தவுள்ளது.



தீபாவளியை முன்னிட்டு இப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இப் போட்டிகள் இம் மாதம் 18, 19ஆம் திகதிகளில் சுன்னாகத்தில் உள்ள மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இப் போட்டிகளில் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற பதிவு செய்த அணிகள் மட்டுமே பங்குபற்றமுடியும் எனவும் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அணிகள் இம் மாதம் 18 ஆம் திகதி சுன்னாகத்தில் உள்ள மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக மைதானத்திற்கு காலை 8 மணிகக்கு வருகை தந்து பதிவு செய்து போட்டிகளில் பங்குபற்ற முடியும் எனவும் போட்டி நிரலும் குறித்த தினத்திலேயே மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் மாவட்ட தாச்சி சங்க தலைவர் செல்லையா சண்முகலிங்கம் அறிவித்துள்ளார். (க-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# University of Jaffna, Sri Lanka

## WALK - IN - INTERVIEW

**Visiting Instructor in English Language Teaching / Faculty of Arts**

Walk in interview for the post of visiting Instructor in English Language Teaching will be held at **9.00 am on 23.10.2014** at the Board Room of this University.

Candidates who have the required qualifications are invited for a Walk in Interview, with self prepared applications.

| post | SALARY SCALE |
|---|---|
| visiting Instructor | Rs.750/- per hour |

**Qualifications**

a) A special degree in English / English Language Teaching/English Literature OR

b) A General degree with a subjects of English / English Language Teaching / English Literature OR

c) Postgraduate degree or diploma in English / English Language Teaching / English Literature

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at time with relevant certificates, NIC and self prepared application.

14.10.2014

Registrar
University of Jaffna


# வேட்பாளர் குறித்து...

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஊடகங்கள் இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ள போதிலும்தேர்தல் குறித்து இன்னமும் உறுதியான முடிவுகள் எடுக்கப்படவில்லை, ஐக்கிய தேசிய கட்சி ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது குறித்து இன்னமும் ஆராய்ந்து வருகின்றோம்.ஜனாதிபதி வேட்பாளர் குறித்து பல கருத்துக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன,எனினும் இறுதி முடிவெடுக்கப்படவில்லை.

கட்சி எந்த தேர்தலுக்கும் தயாராகவுள்ளது,ஊவா தேர்தல் முடிவுகள் கட்சியால் எந்த தேர்தலையும் வெல்ல முடியும் என்பதை நிரூபித்துள்ளன,ஆகவே நாங்கள் எதற்கும் அஞ்சவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மங்கள சமரவீர ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த கூடிய பரந்துபட்ட கூட்டணியே தற்போது அவசியம்,இதற்கு ஜே.வி.பி மற்றும் சரத் பொன்சேகா போன்றவர்களின் ஆதரவு அவசியம் என குறிப்பிட்டுள்ளார்.

(செ-11)


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை

වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව

VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
CHUNNAKAM

*My No :Np/14/41(15)/01/Tender/2014* *Date:* 15.10.2014

## விலைக் கேள்விக்கான கோருதல்

01.தவிசாளர், பெறுகைக்குழு, **வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம், யாழ்ப்பாணம்**, தகுதி வாய்ந்த ஒப்பந தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை **திறந்த போட்டி கேள்வி கோரல** நடைமுறைக்கு அமைவாக கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

02.கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்ட்வணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

03.ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். (தொலைபேசி: 0212240017, மின்னஞ்சல் vspsch@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை, 15.10.2014-ம திகதி தொடக்கம் 04.11.2014ம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவண ங்களை பார்வையிடலாம்.

04.ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்களினால் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி படிவத்தினை தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி: 0213202277, மின்னஞ்சல் chair man vsps@gmail.com web:- vsps.lk) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச்சமர்ப்பித்து 15.10.2014 முதல் 04.11.2014 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக் கப்படாத கட்டணமாக ரூபா.1000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

05.விலைக்கேள்விகள் 05.11.2014ம் திகதியன்று 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மூலப்பிரதி, இணை

சுன்னாகம் எனும் முகவரிக்கு உரிய காலத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ

கான கேள்வி விபரத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும் நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் 05.11.2014 ஆம் திகதியன்று 2.00 மணிக்கு விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

06.கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 23.10.2014 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்.

07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். குறித்த தொகை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு(ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | குப்பிளான் மின்திரை வீதி திருத்தம் | 4.09 | 03 மாதம் | M7/C8 | 40,000.00 |
| 02 | உடுவில் உதயசூரியன் வீதி திருத்தம் | 2.05 | 03 மாதம் | M7/C8 | 20,000.00 |
| 03 | புன்னாலைக்கட்டுவன் விளையாட்டு மைதானம் மதில் அமைத்தல் | 2.89 | 03 மாதம் | M7/C8 | 28,000.00 |

தி.பிரகாஷ்,
தவிசாளர்.

(சி-8755)

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பரீட்சைகள் - 2012

1, இசைமாணி / நடனமாணி முதலாம் வருடத் தேர்வு
2, இசைமாணி / நடனமாணி இரண்டாம் வருடத் தேர்வு
3, இசைமாணி / நடனமாணி மூன்றாம் வருடத் தேர்வு
4, இசைமாணி / நடமாணி நான்காம் வருடத் தேர்வு

மேற்படி இசைமாணி மற்றும் நடனமாணி பரீட்சைகளை 27.10. 2014 (திங்கட்கிழமை) தொடக்கம் 04.11.2014 (வெள்ளிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள வெளி வாரிப் பரீட்சைப் பிரிவு மண்டபத்தில் பின்வரும் ஒழுங்கில் நடத்துவ தற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| இசைமாணி/நடனமாணி முதலாம் வருடத் தேர்வு<br>இசைமாணி/நடனமாணி மூன்றாம் வருடத் தேர்வு | 27.10.2014 - 30.10.2014 |
| இசைமாணி/நடனமாணி இரண்டாம் வருடத் தேர்வு<br>இசைமாணி / நடனமாணி நான்காம் வருடத் தேர்வு | 31.10.2014 - 04.11.2014 |

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் 23.10.2014 (வியாழக்கிழமை) தொடக்கம் வெளி வாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**முக்கிய குறிப்பு :-** செய்முறைப் பரீட்சைகள் தொடர்பான விபரங் கள் பின்னர் அறியத்தரப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு :-** 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர் கொள்ளவும்.

**பதிவாளர்** (சீ-8754) **10.10.2014**



# கண்ணீர் அஞ்சலி



## வேலுப்பிள்ளை செல்லத்துரை

(தாடி மாஸ்டர் - சோதிடர்)

எமது சக ஆசிரிய மாணவன் செ.கரன் அவர்களின் அன்புத் தந்தையார் வேலுப்பிள்ளை செல்லத்துரை (தாடி மாஸ்டர் - சோதிடர்) அவர்கள் காலமான செய்தியறிந்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகத்தினர் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(8062)

**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகம்**



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி
## ரமேஸ்குமார் எழிலரசி

2014 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் 177 புள்ளிகளைப் பெற்று எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்த செல்வி ரமேஸ்குமார் எழிலரசிஅவர்களையும் மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

01. செல்வி S. அனுஷியா - 151
02. செல்வி S. ஜம்ஷா - 128
03. செல்வி L. வினோஜிதா - 136
04. செல்வன் R. வானுஷன் - 140
05. செல்வன் S. சரண்ராஜ் - 143
06. செல்வன் A. அலெக்ஷன் - 103

ஆகிய மாணவர்களையும் இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களான திருமதி உ.செல்வரத்தினம், திருமதி ஹெ.சுரேன்குமார் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/ஏழாலை ம.வி

(8059)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி
## வசந்தகௌரி விக்கினேஸ்வரன்



எமது வித்தியாலய சிரேஷ்ட ஆசிரியை திருமதி வசந்தகௌரி விக்கினேஸ்வரன் அவர்கள் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற நல்லாசிரியர்களுக்கான விருதான **பிரதீபா பிரபா** விருதினைப் பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் இவர் மேலும் பல விருதுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

- ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/ஏழாலை ம.வி

(8059)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழக் கோரிக்கைப் பேச்சு...

மகிந்த ராஜபக்ஷ மொட்டந் தலைக்கும் முழந்தாளுக்கும் முடிச்சுப் போடுவதற்கு முனைவதாக கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நிறைவேற்று அதிகாரம் என்பது ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஒரு அதிகாரமாகும். தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, சிங்கள மக்களுக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையானது ஒரு பிரச்சினைக்குரிய விடயமாகும்.

அவ்வாறிருக்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற கருத்துக்கள் தற்போது பெரும்பான்மை சமூகமான சிங்கள மக்கள் மத்தியிலும் மேலெழுந்திருக்கின்றன. குறிப்பாக இடதுசாரிக் கட்சிகள், எதிர்க்கட்சிகள் மற்றும் பௌத்த மதத்தலைவர்கள் பலர நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது குறித்து கலந்துரையாடல் களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான நெருக்கடிமிக்க சூழ்நிலையிலேயே ஜனாதிபதி ஈழக் கோரிக்கையை முன்வைத்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை தொடர்பான நெருக்கடியைக் குறைப்பதற்குக் கருதுகின்றார். ஒரு நாட்டின் ஜனாதிபதி இவ்வாறு கருத்து வெளியிடுவதானது வேடிக்கையாக இருக்கின்றது.

உண்மையிலேயே ஈழக் கோரிக்கைக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமைக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது. இது வெறுமனே சிங்கள மக்களை திசைதிருப்புவதற்காக மொட்டந் தலைக்கும் முழந்தாளுக்கும் முடிச்சுப்போடும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முயற்சியாகும். அவரின் இநதக் கருத்துக்கள் அர்த்தமறறவை. அவரின் இக்கருத்துக்கள் தொடர்பில் சிங்கள மக்களே தெளிவு பெற வேண்டியவர்களாக உள்ளனர் என மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## 'நோபயர்...

வழங்கும்விழாவில்நோபயர் ஸோன் ஆவணப்படம் விருதிற்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 24-ம் திகதி நியூயோர்க்கில் நடைபெறவுள்ள விருது வழங்கும் விழாவில் வெற்றியாளர்கள் அறிவிக்கப்படுவர்.

இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பில் சனல் 4 ஊடகத்தின் கலம் மெக்ரேவினால் எடுக்கப்பட்ட நோபயர் ஸோன் ஆவணப்படம் சர்வதேச ரீதியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. மேலும் ஆவணப்படத்தின் குற்றச் சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இலங்கை மீன்களுக்கு...

வில்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது.

சர்வதேச நெறிமுறைகளுக்கு அமைய மீன்பிடித் தொழிலில் ஈடுபடாத நாடுகளில் இருந்து மீன்களை இறக்குமதி செய்வதில்லை எனும் கொள்கையில் ஐரோப்பிய ஒன்றியம் உறுதியுடன் செயல்படுகிறது.

இதேவேளை இலங்கையுடன் சேர்ந்து இவ்வகையிலான மீன்பிடியை தடுத்து நிறுத்த வேண்டும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்ட பெலீஸ், பிஜி, பனாமா, டோகோ மற்றும் வனுவாட்டு ஆகிய நாடுகள் வெற்றிகரமாக இப்பிரச்சினையை கையாள நடவடிக்கைகளை எடுத்துள்ளன என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் செய்திக் குறிப்பு கூறுகிறது.

கடுமையான தமது கொள்கைகள் பலனளிக்கத் தொடங்கியுள்ளன என்று கூறும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கடற்சார் விவகாரங்களுக்கு பொறுப்பான ஆணையாளர் மரியா தமான்கி, சட்டவிரோத மீன்பிடிகளைத்தடை செய்யுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்ட ஐந்து நாடுகள் தமது பாராட்டுகளைப் பெறும் அதேநேரம், துரதிர்ஷ்டவசமாக இலங்கை அப்படியான பாராட்டை பெறமுடியாத நிலையில் உள்ளது என்று தெரிவித்துள்ளார். கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர மாதமே சட்டவிரோதமான மீன்பிடித் தொழிலை கட்டுப்படுத்துவது குறித்த தமது கவலைகள் இலங்கைக்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதை நீக்குவது தொடர்பில் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆய்வு தெரிவிக்கிறது என்று அந்தச்செய்திக்குறிப்பில்கூறப்பட்டுள்ளது.

உரிய அனுமதியின்றி ஆழ்கடலுககு சென்று மீன்பிடிக்கும் படகுகளைத் தடுத்து நிறுத்துவது அப்படியான தொழிலை நெறிமுறைப்படுத்தி கட்டுக்குள் கொண்டுவருவது, சர்வதேச மீன்பிடிச் சட்டங்களுக்கு உட்பட்டு தொழிலைச் செய்வது ஆகியவை தொடர்பில் நடவடிக்கை எடுக்காதது இலங்கையின் பலவீனத்தைக் காட்டுகிறது என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறுகிறது.

இப்படியான காரணங்களாலேயே இலங்கை படகுகளால் பிடிக்கப்படும் மீன்களுக்கு தடை விதிக்க வேணடிய நிலைப்பாட்டை தாங்கள் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறுகிறது.

எனினும் வர்த்தக நடவடிக்கைகளை பாதிக்காத வகையில் இந்தத் தடை அடுத்த ஆண்டு ஜனவரி மத்தியிலிருந்து அமலுக்கு வரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## 13 ஐ தாண்டி ஐ.தே.க...

அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,

அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக அரசியல் கட்சிகள், மதத் தலைமைகள் மற்றும் பொது அமைப்புகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவரே போட்டியிடுவார்.

எதிர்காலத்தில் அமையும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்யும்.

அத்துடன், நீதித்துறை, பொலிஸ், இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு, தேர்தல் ஆணையம் மற்றும் பொதுச சேவை ஆணைக்குழு என்பவற்றின் சுதந்திரமான செயற்பாடுகளை நாம உறுதி செய்வோம். இதன் மூலம் நாட்டில் இடம்பெறும் மோசடிகள், ஊழல்கள் மற்றும் இலஞ்சம் என்பவை முடிவுக்கு கொண்டு வரப்படும்.

அத்துடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திகள், விவசாயம், சுகாதாரம் மற்றும் கல்வி என்பன நாட்டின் அனைத்து மக்களையும் சென்றடைய வழிவகை செய்யப்படுவதுடன், அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொதுவான வெளி நாட்டுக் கொள்கை பின்பற்றப்படும் என ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (செ-11)

## மகிந்த போட்டி...

அத்துரலியே ரத்ன தேரர் உரையாற்றினார்.

இரண்டு தடவைகள் வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்த ஜனாதிபதி பதவியை தொடர்ந்தும் வகிப்பதற்கு வசதியாக மகிந்த 18-வது திருத்தச் சட்டத்தை கொண்டுவந்தார்.

இதனை எனது கட்சியான ஜாதிக ஹெல உறுமயவும் ஆதரித்து வாக்களித்து வரலாற்றுத் தவறைச் செய்துள்ளது.

இந்த சட்ட திருத்தத்தின் மூலம் அதுவரை செயல்பாட்டில் இருந்த சுயாதீன ஆணைக் குழுக்கள் தொடர்பான 17-வது திருத்தச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டு, சுயாதீன ஆணைக் குழுக்கள் இல்லாதொழிக்கப்பட்டன.

நாட்டில் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவிட்டது.

ஜனாதிபதி மகிந்த மீண்டும் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை வலுப்படுத்திய பின்பே அவர் தேர்

02ஆம் பக்கம் பார்க்க....


**உடனடி வேலைவாய்ப்பு**

பிரல்யமான மோட்டார் சைக்கிள் கம்பனிக்கு விற்பனை பிரதிநிதி, அலுவலக பணியாளர் (பெண்) உடனடியாக தேவைப்படுகின்றார்கள். கணனி அறிவும், முன் அனுபவமும் மேலதிக தகைமையாக கருதப்படும்.

தொடர்புகளுக்கு - Redeem Electrical & Motor Spare Distributors (Pvt) Ltd
No.713, Hospital Road, Jaffna.
e-mail - redpvtltd@yahoo.co.uk T.P : 077 7774 099

(8053)

● சுயவிபரக் கோவையுடன் Passport Size புகைப்படம் ஒன்றினையும் இணைத்து எமக்கு அனுப்பி வைக்கவும். மின்னஞ்சல் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.

**வீடு, கடை கட்டடம் கட்டுவதற்கு**
தொடர்பு 0776153563
(8048)

**இன்று முதல் விசேட விலைக்கழிவு**

தீபாவளியை முன்னிட்டு சகல விதமான துணி வகைகளுக்கும் றெடிமெட் ஆடைகளுக்கும் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படுகின்றன.



**லைடன் புடவை நிலையம்**
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் முன்பாக)
021 2222 381

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்
(C-8786)

**அமெரிக்க லொத்தர் விசா**

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற
55000 பேருக்கான வாய்ப்பு, இலவசமாக உங்கள் வெற்றி வாய்ப்பினை உறுதி செய்துகொள்ளுங்கள்
கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம் 2015 இல் A/L எடுப்பவர்கள் கூட விண்ணப்பிக்கலாம்
உடனே விரையுங்கள் - தாமதம் வேண்டாம்
அலட்சியம் வேண்டாம் நம்பிக்கையுடன் பதியுங்கள் வெற்றிபெறுங்கள்

கிளிநொச்சி - A9 வீதி - பழைய ஆஸ்பத்திரி முன்னால் 0771516537
யாழ்ப்பாணம் - 49A சப்பல் லேன் - பொது நூலகம் முன்னால் 0773867257
நெல்லியடி - முடக்காட்டுச்சந்தி 0776699892
வல்வெட்டித்துறை - யாழ்வீதி - வல்வெட்டி 0776697960

குறைந்த கட்டணத்தில் **V2 Travels and Tours (Pvt) Ltd** (8058)
● அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள் ● உள்நாட்டு, வெளிநாட்டு துரிதபொதிகள் சேவை

**WORLD MOVIES – JAFFNA**
Alliance Française de Jaffna
cordially invites you to the screening of
A PORTRAIT OF THE ARTIST AS A YOUNG MAN
After James Joyce 's novel. (1977, 92 min)
on Thursday 16 Octobre 2014 at 4:00 p.m.
at Alliance Française de Jaffna,
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone : 0212228093
English language. Free entrance.
(8049)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**பிரெஞ்சு மொழி**
கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியாகள் (பிரெஞ் ஆசிரியர் உட்பட) சரியான உச்சரிப்பு, CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. யாரும் படிக்கலாம். ஓரிரு மாதங்களும் படிக்கலாம்.




உடன் பதிவுசெய்யுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி. யாழ்ப்பாணம.
(8080)

**தேவை**

எமது பட்டயக்கணக்காளர் நிறுவனத்தில் கீழ் வரும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை.

1. பட்டதாரிகணக்காளர்: B.Com/ HNDA பட்டம்பெற்றவர்கள் நாளாந்த படியாக 500 ரூபா வழங்கப்படும்.
2. கணக்கியல் உதவியாளர் : A/L வர்த்தகப்பிரிவில் சித்தியடைந்தோர். நாளாந்த படியாக 300 ரூபாய் வழங்கப்படும்.

மற்றும் உணவு, தேவைப்படின் தங்குமிட வசதியும் வழங்கப்படும் நேரில் வரவும்
(8064)

தொடர்பு : 140, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி (பெற்றோல் செற் முன்பாக) 021 222 2478

**31-ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**

அன்புடையீர் !
கடந்த 16.09.2014 அன்று சிவபதம் அடைந்த எமது பாசமிகு குடும்பத் தலைவர்



**அமரர் நடேசு விநாயகமூர்த்தி**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை 16.10.2014 வியாழக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் அன்னாரது ஆத்மா சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

இங்ஙனம் :
குடும்பத்தினர்

1-ம் வட்டாரம்,
முள்ளியவளை, முல்லைத்தீவு
(8056)

**SPOKEN SINHALA**
**03 Months (Sat/Sun)**
புதிய பிரிவு ஆரம்பம்
18.10.2014 காலை 8.00
இப்பிரிவானது சனி,ஞாயிறு தினங்களில் காலை 8.00 - 10.00 வரை இடம்பெறும்
மிகக்குறுகிய காலத்தில் சிங்களத்தில் உரையாட மிகச்சிறந்த பாடநெறி
சிங்கள இரண்டாம் மொழிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு விசேட வகுப்பு
அனுபவம்மிக்க சிறந்த விரிவுரையாளரால் நடாத்தப்படுகின்ற சிறப்பான பாடநெறியில் இணைந்திடுங்கள்
**E-CITY COLLEGE**
இல.372D, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212217106 / 0773400418
(C-8751)

**பணிநிலை வேண்டுகை**

**புத்தகம் கட்டுநர்**

மேற்குறிப்பிட்ட பணி நிலைக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

- வேண்டுகையாளர் யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- நேர்முகத் தேர்வு 2014-10-16,17,18 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளதால் நேரில் வருகை தரவும்.

(C-8757)

**கரிகணன் (தனியார்) நிறுவனம்**
இல. 681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.10.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org